வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 22.12.2023 வெள்ளிக்கிழமை | இதழ் : 354 | பக்கங்கள் : 12

# மாகாண சபைக்குள் பிரதேச செயலகங்கள்

## தமிழ் எம்.பிக்களிடம் உறுதியளித்தார் ஜனாதிபதி ரணில்
## நல்லிணக்க ஆணைக்குழுவை சட்டமாக்கவும் யோசனை

கொழும்பு, டிசெம்பர் 22

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தி, பிரதேச செயலகங்களை மாகாண சபைக்குள் கொண்டு வருவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் உறுதியளித்துள்ளார்.

நேற்று ஜனாதிபதிக்கும் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நடைபெற்ற

11





ஐ.தே.கவுக்குள் முரண்பாடு!

## பொதுச் செயலாளர் பதவியை கோரும் ரவி

கொழும்பு, டிசெ. 22

பொதுச் செயலாளர் பதவி தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியில் பல முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது. கட்சியின் தற்போதைய பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டாரவுக்கு மீண்டும் அதே பதவியை வழங்க வேண்டுமென

11

## யாழ்தேவி தடம் புரண்டது

கொழும்பு, டிசெ. 22

யாழ்தேவி கடுகதி ரயில் தடம்புரண்டதால் வடக்கிற்கான ரயில் சேவை பாதிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. காங்கேசன் துறையில் இருந்து கல்கிஸை நோக்கி புறப்பட்ட

11

## எம்மை தொடர்ந்து ஏமாற்றவேண்டாம்!

### ஜனாதிபதியிடம் நேரில் கூறினார் சம்பந்தன்

கொழும்பு, டிசெ. 22

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், அரசியல் தீர்வற்ற வெறும் நல்லிணக்கக் கொடியைக் காண்பித்து எம்மைத் தொடர்ந்து ஏமாற்றவேண்டாம் எனவும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின்

11



## இலங்கையின் வெங்காய விலையை தீர்மானிக்கும் இந்திய வர்த்தகர்கள்!

கொழும்பு, டிசெ. 22

இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இருந்து கொண்டுவரப்படும் பெரிய வெங்காயத்தை களஞ்சியசாலைகளில் வைத்து நாளை முதல் தலா 600 ரூபா விற்கு விற்பனை செய்யுமாறு இந்தியாவிலிருந்து பெரிய வெங்காயத்தை அனுப்பும் வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர் என தம் புள்ளை பிரதேசத்தில் பெரிய வெங்காயம் விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

இந்தியாவில் இருந்து பெரிய வெங்காயத்தை இறக்குமதி செய்து களஞ் சியப்படுத்தியுள்ள உரிமையாளர்களும் இந்தியாவில் உள்ள தொழிலதிபர்கள்

11

## குடத்தனையில் குழு மோதல் 7 பேர் வைத்தியசாலையில்!

யாழ்ப்பாணம், டிசெ. 22

வடமராட்சி கிழக்கு பகுதியில் இரு தரப்பினருக்கு இடையில் ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் 07 பேர் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வடமராட்சி கிழக்கு, குடத்தனை மாளிகைத்திடல் பகுதியில், இரண்டு தரப்பினருக்கு இடையில் நீண்டகாலமாக நிலவி வரும் முரண்பாடு முற்றிய நிலையில் இரு தரப்பினருக்கு இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது.

குறித்த முதல் சம்பவத்தில் ஒரு தரப்பில் நால்வரும் மற்றைய

11



## மன்னார் அரச அதிபராக கனகேஸ்வரன் நியமனம்

யாழ்ப்பாணம், டிசெ. 22

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் க.கனகேஸ்வரன், மன்னார் மாவட்டத்தின் புதிய அரச அதிபராக நாளை சனிக்கிழமை காலை பதவியேற்கிறார்.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபராக கே.கனகேஸ்வரன் பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சின் செயலாளரினால் நிமிக்கப்பட்டுள்ளார். நியமனக்கடிதம் கையளிக்கும் நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், இராஜாங்க அமைச்சருமான காதர் மஸ்தான் கலந்து கொண்டார்.

1998 முதல் 2003 செப்ரெம்பர் வரை கொடிகாமம் போகட்டி அ.த.க. பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றிய அவர், 2003 முதல் 2004 ஒகஸ்ட் வரை நிர்வாக சேவைக்கான

11

## பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை!

கொழும்பு, டிசெ. 22

அரச மற்றும் அரச அனுசரனையின் கீழ் இயங்கும் தனியார் பாடசாலைகளுக்கான மூன்றாம் தவணையின் முதலாம் கட்டம் இன்றுடன் நிறைவடையவுள்ளது.

கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்டம் எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி ஆரம்பிக்கப்படும் என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

## மொட்டு கட்சியின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க அல்லர்!

### கூறுகின்றார் உதயங்க வீரதுங்க

கொழும்பு, டிசெ. 22

ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுன வேட் பாளரை நிறுத்தும். தற்போதைய ஜனாதிபதியை வேட்பாளராக நியமிக்காது என ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் செயல்பாடுகளை

11



## யாழில் மரக்கறி விலைகள் உச்சம்

யாழ்ப்பாணம், டிசெ. 22

நாட்டில் தற்போது நிலவும் மழையுடனான காலநிலைக்கு மத்தியில் மரக்கறிகளின் விலைகளும் உச்சத்தை தொட்டுள்ளன.

யாழ் மாவட்டத்திலுள்ள சந்தைகளில் பாகற்காய் கிலோ 600 ரூபாவுக்கும், பச்சை மிளகாய் கிலோ 1600 ரூபாவுக்கும், கத்தரிக்காய் கிலோ

11

# இப்படியும் நடக்கிறது

இந்தப் பத்தியை இப்போது சில சிங்கள நண்பர்களும் படிக்கத் தொடங்கியிருக்கின்றனர் என்பதை அறிகின்ற போது மகிழ்ச்சி தான்.

'கூகுள்' இற்குத்தான் நன்றி சொல்லவேண்டும். சில தவறுகள் இருந்தாலும் தமிழிலிருந்து சிங்களத்திற்கு மொழி பெயர்த்து படிக்கின்றபோது சில விடயங்கள் குழப்பமாக இருந்தாலும் இவர் என்ன சொல்ல வருகிறார் என்பதை 'கூகுள்' சரியாகவே சொல்கின்றது.

அதனால்தான் சில சிங்கள நண்பர்கள் அனுப்புகின்ற விடயங்களையும் இந்த ஊர்க் குருவியால் அறிந்துகொள்ள முடிகின்றது.

நேற்று இந்தப் பத்தியில், வரவிருக்கின்ற ஜனாதிபதி தேர்தலில் தான் போட்டியிடுவதற்கான பணிகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்துவிட்டார் என்று எழுதியிருந்தேன். மகிந்த தரப்பில் ரணிலே தமது வேட்பாளர் என்பதை உறுதிசெய்துவிட்டது பற்றியும் எழுதியிருந்தேன். ஆனால் பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகல காரியவாசம் வழக்கம்போல தமது கட்சியில் நான்கு வேட்பாளர்களின் பெயர்கள் கவனிப்பில் இருப்பதாக அறிக்கை வெளியிட்டு குழப்பியிருந்தார். நேற்றைய பத்தியிலேயே மகிந்தவின் இந்த முடிவுக்கு பஸில் விருப்பம் தெரிவிக்கவில்லை என்றும் எழுதியிருந்தேனல்லவா. பஸிலின் செல்லப்பிள்ளையான சாகல அப்படித்தான் சொல்லுவார் என்பது தெரிந்ததுதானே.

அதுவல்ல இன்று சொல்ல வருவது, நேற்றைய பத்தியை சிங்களத்தில் மொழி பெயர்த்துப் படித்த நண்பர் ஒருவர், தான் எழுதிய முகநூல் பதிவு ஒன்றின் இணைப்பை அனுப்பியிருந்தார்.

அதில் அவர் தெரிவித்திருக்கின்ற சில விடயங்கள் ஏற்கனவே தெரிந்ததுதான் என்றாலும் நேற்று அவை பற்றி குறிப்பிடவில்லை.

ரணில் விக்கிரமசிங்க இந்தத் தேர்தலில், தான் அங்கம் வகிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை. அவர் ஒரு சுயாதீனமான வேட்பாளராகவே போட்டியிடவிருக்கிறார் என்றும், அவருக்கு பல்வேறு கட்சிகளும் ஆதரவு வழங்கவிருக்கின்றன என்பதும்தான் நண்பர் எழுதியிருக்கின்ற புதிய தகவல்.

ரணில் விக்கிரமசிங்க, தனது ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் போட்டியிட்டால், அவருக்கு ஆதரவு வழங்குவது என்பது சில கட்சிகளுக்கு சங்கடங்களை ஏற்படுத்தலாம். ஆண்டாண்டு காலமாக ஐ.தே.க. எதிர்ப்பு அரசியல் செய்துவிட்டு இப்போது ஐ.தே.க. ஆதரவாளருக்காக பிரச்சாரம் செய்வதை பல கட்சிகள் விரும்பவில்லை என்றும், அது வாக்காளர்களைக் கூட குழப்பத்தில் ஆழ்த்திவிடும் என்றும் ஆலோசனை தெரிவிக்கப்பட்டிருக்கின்றதாம். எப்போதுமே யானைக்கு எதிராக வாக்களித்தவர்களை இப்போது யானைக்கு வாக்களியுங்கள் என்று கேட்கமுடியாத நிலை. ஆனால், யானைக்கு வாக்களித்து பழகியவர்களோ பல ஜனாதிபதித் தேர்தல்களில் வேறு சின்னங்களுக்கு வாக்களித்து பழக்கப்பட்டுவிட்டார்கள். அவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு ரணில் எதிர்வரும் தேர்தலில் சுயாதீனமான வேட்பாளராக - பொதுவாகச் சொன்னால் பொதுவேட்பாளராக களம் இறங்கவிருக்கிறார்.

அவர் ஒரு கூட்டணியாக இணைந்து ஒரு கூட்டணியில் போட்டியிட்டாலும், அந்த கூட்டணியில் மகிந்தவின் பொதுஜன பெரமுனவும் இடம்பெறும் என்பதால் அவர்களுடன் எக்காலத்திலும் இணைந்து பயணிக்கமுயாத வர்களின் ஆதரவை பெறமுடியாது போய்விடும் என்பதும், அவர்கள் ரணிலுக்கு வெளியிலிருந்து ஆதரவு வழங்குவது அவர்களுக்கு சங்கடங்களை உருவாக்காது என்பதும் கவனத்தில் எடுக்கப்பட்டிருக்கின்றதாம்.

இதனால் ரணிலுக்கு ஆதரவு வழங்க இப்போது பல்வேறு கட்சிகளில் இருந்து பலரும் தனித்தும் கட்சி ரீதியாகவும் ஆதரவு வழங்க தயாராகி வருவதாகவும் அந்த நண்பரின் தகவல் தெரிவித்தது.

ரணிலின் தேர்தல் பிரசாரத்திற்கு பொறுப்பாக தற்போதைய ஜனாதிபதி செயலக அலுவலக பிரதானி சாகல ரத்னாயக்க பெறுப் பேற்க விருப்பது பற்றியும் நேற்று எழுதியிருந்தேன்.

கொழும்பில் 'பிளவர் றோட்டில்' உள்ள பிரதமர் அலுவலகத்திற்கு முன்னால் உள்ள பெரிய பங்களா ஒன்றை ரணிலுக்கு நெருக்கமான ஒருவர் வழங்கியிருப்பதாகவும், அந்த வீட்டிலிருந்தே பிரசாரப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அந்த நண்பரின் தகவல் தெரிவித்தது. அதற்காக அந்த வீடு புனரமைக்கப்பட்டு வருவதாகவும் ஜனவரி இரண்டாம் வாரத்திலிருந்து முழுவீச்சில் பிரசாரத்தை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

- ஊர்க்குருவி.

# ஜனாதிபதி அலுவலக வளாகத்தில் கிறிஸ்மஸ் கரோல் கீத நிகழ்வுகள்

## ஜனாதிபதியும் கலந்துகொண்டார்

கொழும்பு, டிசெ. 22

ஜனாதிபதி அலுவலகம், சுற்றுலா அபிவிருத்திச் சபை, முப்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து ஜனாதிபதி அலுவலக வளாகத்திலும் அதனை அண்டிய பகுதியில் வருடாந்தம் ஒழுங்கு செய்யும் விஷேட கிறிஸ்மஸ் கரோல் கீதம் இசைக்கும் நிகழ்வு மற்றும் கிறிஸ்மஸ் வலயம் ஆகியவற்றை நேற்றுமுன்தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்து வைத்தார்.

ஜனாதிபதி செயலக வளாகத்தில் மின்விளக்குகளை ஏற்றி இந்த நிகழ்வை ஆரம்பித்து வைத்த ஜனாதிபதி, கிறிஸ்மஸ் கரோல் கீதம் இசைக்கும் நிகழ்விலும் கலந்து கொண்டார்.

நேற்றைய கிறிஸ்மஸ் கரோல் இசை நிகழ்வு இலங்கை கடற்படையின் பாடல் மற்றும் வாத்தியக் குழுவினரால் நிகழ்த்தப்பட்டதுடன், இந்த கிறிஸ்மஸ் கரோல் கீதம் இசைக்கும்



நிகழ்வு நாளை வரை ஜனாதிபதி செயலக வளாகத்தில் இரவு 7.00 மணி முதல் 8.30 மணி வரை நடைபெறவுள்ளது.

நேற்று இலங்கை விமானப்படையினரும், இன்று இலங்கை இராணுவத்தினரும், நாளை இலங்கை பொலிஸ் பாடல் மற்றும் வாத்தியக் குழுவினரும், இணைந்து கிறிஸ்மஸ் கரோல் கீதம் இசைக்கும் நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளனர்.

ஜனாதிபதியுடன் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் ஜனாதிபதி அலுவலக சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் முப்படை தளபதிகள் உள்ளிட்ட பாதுகாப்புப் பிரிவு சிரேஷ்ட அதிகாரிகளும் இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

(அ)

# தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50ஆவது ஆண்டு விழா யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், டிசெ. 22

மக்கள் சார்பான முற் போக்குக் கலை இலக்கியப் பாதையில் கடந்த 50 ஆண்டு களாகப் பயணிக்கின்ற தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50 ஆவது ஆண்டு விழா வரும் நாளை சனிக்கிழமை மாலை 3 மணியளவில் வேம்படி வீதியில் யாழ் மத்திய கல்லூரி மைதானத்திற்கு அருகில் அமைந்துள்ள றிம்மர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவரும், எழுத்தாளரும், தாயகம் சஞ்சிகையின் ஆசிரியருமான க.தணிகாசலம் அவர்களின் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் வாழ்த்துரைகளை கவிஞரும், மொழி பெயர்ப்பாளரும், பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலையின் ஓய்வுநிலை அதிபருமான சோ. பத்மநாதன் (சோ. ப), எழுத்தாளரும், வவுனியா கல்வியியற் கல்லூரியின் ஓய்வுநிலை உபபிடாதிபதியுமான ந. பார்த்தீபன் , எழுத்தாளரும், சிரேஷ்ர சட்டத்தரணியுமான சோ.தேவராஜா, தேசிய கலை இலக்கியப் பேரவையின் பொதுச் செயலாளரும், மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரியின் ஓய்வுநிலைப் பீடாதிபதியுமான சிவ. இராஜேந்திரன் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

தொடர்ந்து கலை நிகழ்வுகள் வரிசையில் கே.ஏ.சுப்பிரமணியம் நினைவு சத்தியமனை நூலக மாணவர்களின் கவிதா நிகழ்வும், யாழ் மாவட்ட தேசிய கலை இலக்கியப் பேரவையின் கலைக் குழுவினரும், வவுனியா மாவட்ட தேசிய கலை இலக்கியப் பேரவைக் கலைக் குழுவினரும் வழங்குகின்ற பாடல்களும், தர்மலிங்கம் ஸ்ரீபிரகாஸ் தலைமையில் 'மக்கள் வாழ்வைச் சீர்படுத்துவது நிகழ்காலத்தின் புரிதலா? எதிர்காலம் பற்றிய ஏக்கமா?' என்ற தலைப்பிலான பட்டிமன்றம் தம்பிப்பிள்ளை சுதன், பாலச்சந்திரன் தினேஸ், பரமநாதன் விஜிந்தன், ஆனந்த குமார் கபிலாயன் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இடம்பெறவுள்ளன.

மேலும் வவுனியா மாவட்ட தேசிய கலை இலக்கியப் பேரவையின் தயாரிப்பில் நடராஜா பார்த்தீபன் அவர்களின் நெறியாள்கையில் 'ஏதோ உயிரோடு இருக்கிறோம்' என்ற குறுநாடகமும், செம்முகம் ஆற்றுகைக் குழுவின் தயாரிப்பில் கு.சாரங்கன் நெறியாள்கையில் 'ஊன் ஆட்டம்' மற்றும் க.சத்தியசீலனின் நெறியாள்கையில் 'தேவை' ஆகிய குறுநாடகங்களும், சண் நாடகக் குழுவினரின் தயாரிப்பில், புண்ணிய மூர்த்தி கணேசராசா நெறியாள்கையில் 'என்னவென்று சொல்வேனடி?' நாடகமும் இடம்பெறவுள்ளன. நிகழ்ச்சித் தொகுப்பினை சபா தனுஜன் மேற்கொள்வார்.

இந் நிகழ்வின் விசேட அம்சமாகப் புகைப்படக் கண்காட்சி மற்றும் புத்தகக் கண்காட்சி ஆகியனவும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. கலை இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் தவறாது இந் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு தேசிய கலை இலக்கியப் பேரவையினர் அழைப்பு விடுத்துள்ளனர். (அ)

# பெரும் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்த மயிலத்தமடு கால்நடை பண்ணையாளர்கள்

மட்டக்களப்பு, டிசெ. 22

மட்டக்களப்பு மயிலத்தமடு மாதவனை கால்நடை பண்ணையாளர்கள் முன்னெடுத்து வரும் போராட்டம் நாளை சனிக்கிழமை 100 நாட்களை தொடும் நிலையில் அன்றைய தினம் பாரிய போராட்டத்துக்கு பண்ணையாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

நேற்று சித்தாண்டியில் கால்நடை பண்ணையாளர்கள் போராட்டம் முன்னெடுத்துவரும் இடத்தில் ஊடகவியலாளர்கள் சந்திப்பொன்றை நடத்தினர்.

தமது மேய்ச்சல் தரை மீட்பு போராட்டம் நூறு நாட்கள் அண்மித்துள்ள நிலையில் தமது கோரிக்கைக்கான நியாயமான தீர்வுகள் எதுவும் இதுவரை வழங்கப்படாத நிலையே காணப்படுவதாக மயிலத்தமடு,மாதவனை கால்நடை பண்ணையாளர்கள் கமநல அமைப்பின் தலைவர் சீ. நிமலன் தெரிவித்தார்.

மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கு பல தடவைகள் தமது கோரிக்கைகள் குறித்து கடிதம் எழுதியுள்ள நிலையிலும் இதுவரை ஒரு கடிதத்திற்கு கூட பதில் வழங்கப்படவில்லையெனவும் அவர்கள் கூறினர்.

தாங்கள் நடு வீதியில் நூறு நாட்களாக போராடிவரும் எமது கோரிக்கைகளுக்கு அரசியல்வாதிகளோ அதிகாரிகளோ கவனத்தில் கொள்ளாத நிலையே இருந்து வருவதனால் நாளை சனிக்கிழமை பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த போராட்டத்திற்கு சிவில் சமூக அமைப்புகள்,அரசியல்வாதிகள்,பொது அமைப்புகள், விவசாய அமைப்புகள்,பல்கலைக்கழக மாணவர்கள்,மதத்தலைவர்கள் என அனைவரையும் ஆதரவு வழங்குமாறும் அவர் கோரிக்கை விடுத்தார்.

(அ)

ஈழநாடு
Eelanadu
22.12.2023 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், மார்கழி 06

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ரணிலின் சந்திப்புக்கள்

ரணில் விக்கிரமசிங்க மீண்டும் தமிழ் கட்சிகளை நேற்றைய தினம் சந்தித்திருக்கின்றார் - ஆனால், அதிக நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்திப்பில் பங்குகொள்ளவில்லை. சி.வி.விக்னேஸ்வரன் ஒருவரே சந்திப்பில் பங்குகொள்ளப் போவதில்லை என்று பகிரங்கமாக அறிவித்திருந்தார். ஏனையவர்கள் பகிஷ்கரிக்கவில்லை ஆனால் பங்குகொள்ளவில்லை. சந்திப்பில் எதுவும் நடைபெறப்போவதில்லை என்பதை அறிந்திருந்த காரணத்தினாலேயே பலரும் பங்குகொள்ளவில்லை.

ரணில் விக்கிரமசிங்க பல்வேறு விடயங்களை பேசியிருந்தார். ஆனால் அவர் கூறிய விடயங்களில் ஒன்றைக் கூட நிறைவேற்றவில்லை. உண்மையில் செய்ய முடியாத விடயங்களை கூறி, தேவையற்ற சர்ச்சைகளையே ஏற்படுத்தினார். ஆரம்பத்தில் 13வது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தப் போவதாக கூறினார். இந்தியாவிற்கு செல்வதற்கு முன்னர் அவ்வாறான விடயங்களை கூறுவதன் மூலம், இந்தியா தொடர்ச்சியாக வலியுறுத்திவரும் ஒரு விடயத்தில் தான் அக்கறையுடன் இருப்பதான தோற்றத்தை ஏற்படுத்த முயற்சித்தார்.

13வது திருத்தச்சட்டத்தை கூறினால், தென்னிலங்கையின் கடும்போக்குவாதிகள் எதிர்ப்பை வெளிப்படுத்துவார்கள் என்பது ரணில் அறியாத ஒன்றல்ல. ஆனால் அவ்வாறான எதிர்ப்புக்களையும் தனக்கு சாதகமாகவே பயன்படுத்திக் கொண்டார். பின்னர் 13ஆவது திருத்தச்சட்ட விடயத்தில் அனைத்து கட்சிகளும் ஒன்றுபட்டால் முன்னோக்கி போவதில் தனக்கு எந்தவொரு பிரச்னையும் இல்லை என்றார். கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டுவரப் போவதில்லை என்பது தெரிந்த விடயம். கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டால்தான், விடயங்களை முன்னெடுக்கலாம் என்றால் அது ஒரு போதும் நடைபெறப்போவதில்லை.

ஆரம்பத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் நகர்வுகளில் பங்குகொண்ட தமிழ் கட்சிகள் ஒரு கட்டத்துடன் சந்திப்புக்களில் பயனில்லை என்பதை புரிந்துகொண்டன. இதில் அதிகம் நம்பிக்கை வைத்து ஏமாந்து போனவர் சி.வி.விக்னேஸ்வரன்தான். மாகாண சபை தேர்தல் நடைபெறும் வரையில், ஆலோசனை சபை ஒன்றை அமைப்பதற்கான முயற்சியில் விக்னேஸ்வரன் நம்பிக்கை கொண்டிருந்தார். ஆனால், ரணில் அந்த விடயத்திலும் உறுதியாக செயற்படவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் தான் ஏமாற்றப்பட்டுவிட்டதான உணர்வுடன் சந்திப்புகளில் பங்குகொள்வதை தவிர்த்திருக்கின்றார்.

இந்த விடயம் தொடர்பில் 'ஈழநாடு' ஏற்கனவே சில விடயங்களை தெளிவுபடுத்தியிருந்தது. அவ்வாறானதொரு ஆலோசனை சபை உருவாக்க வேண்டுமாயின் உண்மையில் தமிழ் கட்சிகளின் இணக்கப்பாடு தேவையற்றது. ஒரு நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி என்னும் வகையில் ரணில் தனக்குள்ள அதிகாரத்தின் கீழ் அதனை செய்திருக்க முடியும் ஆனால், கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டு வரவேண்டும் என்று கூறி தனது பொறுப்பை தட்டிக்கழிக்கும் செயல்பாடுகளையே ரணில் முன்னெடுத்திருந்தார். உண்மையில் ரணிலால் தற்போதைய சூழலில் எதனையும் செய்ய முடியாது என்பது தெட்டத்தெளிவாகிவிட்டது. எனவே தமிழ் கட்சிகள் ரணிலை சந்திப்பதில் இனி பயனில்லை.

தமிழ் தேசிய கட்சிகள் தங்களை ஒழுங்குபடுத்தி, பலப்படுத்தும் செயல்பாடுகளையே முன்னெடுக்க வேண்டும். இதனைத்தான் நாம் தொடர்ந்தும் வலியுறுத்திவருகின்றோம்.

# சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் இல்லையேல் போராட்டம் வெடிக்கும்

## துறைமுக பொது ஊழியர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 22

மூன்று வருடங்களுக்கான சம்பள அதிகரிப்பு தொடர்பிலான வேலைத் திட்டத்தை அரசாங்கம் அறிவிக்காவிட்டால் எதிர்வரும் 28ஆம் திகதி முதல் தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பிக்க உள்ளதாக துறைமுக பொது ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது.

இது குறித்தும், ஊழியர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்தும் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்தியுள்ளதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் நிரோஷன் கோரகான தெரிவித்தார்.

2021ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட சம்பள உடன்படிக்கைகள் இம்மாதம் 31ஆம் திகதி முடிவடைவதால் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் அடுத்த மூன்று வருடங்களுக்கான புதிய சம்பள ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட வேண்டும்.

ஆனால், இதுவரை சம்பள அதிகரிப்பு ஒப்பந் தத்தைத் தயாரிக்க முடியவில்லை எனவும் அவர் அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார்.

ஜனவரி முதலாம் திகதி முதல் துறைமுக ஊழியர்களின் சம்பள உயர்வு அறிவிக்கப்படவில்லை. அது தொடர்பான வேலைத்திட்டத்தை அடுத்த 7 நாட்களுக்குள் அறிவிக்குமாறும், இல்லையேல் 28ஆம் திகதி முதல் தொழிற்சங்க நடவடிக்கை எடுக்க முடிவு செய்துள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

# சிதம்பரபுரம் பகுதியில் 3 ஆசிரியர்கள் மோதல்!

## ஒருவர் வைத்தியசாலையில் அனுமதி

வவுனியா, டிசெ. 22

வவுனியா சிதம்பரபுரம் பகுதியில் அமைந்துள்ள பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கிடையில் ஏற்றப்பட்ட மோதலில் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பகுதியில் அமைந்துள்ள பாடசாலையில் கல்வி கற்பிக்கும் மூன்று ஆசிரியர்களுக்கிடையில் நேற்று முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

முரண்பாடு முற்றி கைகலப்பாக மாறியுள்ளது.

இதனால் ஆசிரியர் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பாக சிதம்பரபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இது தொடர்பாக வவுனியா தெற்கு வலயக்கல்வி பணிப்பாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, சம்பவம் தொடர்பாக விசாரணை செய்வதற்காக குழு ஒன்றை அனுப்பியுள்ளதாக தெரிவித்தார். (அ)

# பாதாள உலகக் குழுக்களின் சகல சொத்துகளும் பறிமுதல்

## பொலிஸ்மா அதிபர் அறிவிப்பு



கொழும்பு, டிசெ. 23

வெளிநாடுகளில் இருந்து போதைப்பொருள் வர்த்தகத்தை நடத்தி இந்நாட்டில் பாதாள உலகக் குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்தார்.

அதற்கான அடிப்படைப் பணிகள் தற்போது நடைபெற்று வருவதாகவும், அடுத்த சில வாரங்களில் அது நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.


இந்த நபர்களின் சொத்துக்கள் பொலிஸாரால் கைப்பற்றப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த இரண்டு அல்லது மூன்று தினங்களுக்குள் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் பெரும் தொகையான சொத்துகள் அடையாளங்காணப்பட்டுள்ளன. அத்துடன் பெருந்தொகையான போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் கூறினார்.

இதேவேளை, கடந்த 19ஆம் திகதி முதல் நாடு முழுவதும் உள்ள போதைப்பொருள் வலையமைப்பை கட்டுப்படுத்த பொலிஸார் அதிரடி சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**

வியாபாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். முன்கோபத்தை தவிர்க்க வேண்டிய நாள்.

**இடபம்**

குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். சக ஊழியர்களிடம் மோதல்கள் வரக்கூடும். பொறுமை தேவைப்படும் நாள்.

**மிதுனம்**

குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துகொள்வீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். சிறப்பான நாள்.

**கடகம்**

உங்கள் செயலில் வேகம் கூடும். உறவினர் நண்பர்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். புகழ் கௌரவம் உயரும் நாள்.

**சிம்மம்**

குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். புதிய பாதை தெரியும் நாள்.

**கன்னி**

சந்திராஷ்டமம் இருப்பதால் எதையோ இழந்ததை போல ஒருவித கவலைகள் வந்து செல்லும். வேலைச் சுமை அதிகரிக்கும். எதிர்பார்ப்புகள் தாமதமாகி முடியும் நாள்.

**துலாம்**

பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்கள் கோரிக்கையை ஏற்பார்கள். நன்மை நடக்கும் நாள்.

**விருட்சிகம்**

எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர் நண்பர்களுடன் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். தொட்டது துலங்கும் நாள்.

**தனுசு**

வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்யோகம் குறித்து யோசிப்பீர்கள். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். கனவு நனவாகும் நாள்.

**மகரம்**

எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும். தடைகளை தாண்டி வெல்லும் நாள்.

**கும்பம்**

குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்களை நம்பி மூத்த அதிகாரி சில பொறுப்புகளை ஒப்படைப்பார். நல்லன நடக்கும் நாள்.

**மீனம்**

கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். வியாபாரத்தில் தள்ளிப்போன ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மனசாட்சிபடி செயல்படும் நாள்.

# அமைச்சர் பொன்முடிக்கு 3 ஆண்டு சிறை தண்டனை

## சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு

சென்னை, டிசெ. 22

**வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்த வழக்கில் தமிழக உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி குற்றவாளி என கடந்த செவ்வாய்கிழமை அன்று சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி ஜெயச்சந்திரன் தீர்ப்பளித்தார்.**



மேலும், இலஞ்ச ஒழிப்பு பொலிஸார் வழக்கில் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளன.

பொன்முடியும், அவரது மனைவியும் வருமானத்துக்கு அதிகமாக 64.90 சதவீதத்துக்கு சொத்து சேர்த்துள்ளனர்.

அதனால், அவர்களை விடுதலை செய்து சிறப்பு நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பை ரத்து செய்கிறேன். அவர்கள் இருவரையும் குற்றவாளிகள் என்று முடிவு செய்கிறேன்.

அவர்களுக்கு தண்டனை வழங்குவதற்காக நாளை மறுநாள் (இன்று வியாழக்கிழமை) நேரில் ஆஜராகவேண்டும். ஒரு வேளை ஏதாவது இடையூறு இருந்தால், இருவரும் ஒன்லைன் வாயிலாக ஆஜராகலாம் என தெரிவித்தார்.

அதன்படி, நேற்று தீர்ப்பு வழங்கப்படவிருந்த நிலையில், சைதாப்பேட்டை இல்லத்தில் இருந்து அமைச்சர் பொன்முடியும், அவரது மனைவியும் நீதிமன்றத்தில் ஆஜராக புறப்பட்ட போது அமைச்சர் பொன்முடி பயணித்த காரில் தேசியக் கொடி அகற்றப்பட்டது.

தீர்ப்பை வாசித்த நீதிபதி, அமைச்சர் பொன்முடிக்கு 3 ஆண்டு சிறை தண்டனையும், விசாலாட்சிக்கும், பொன்முடிக்கும் தலா ரூ.50 இலட்சம் அபராதமும் விதித்து தீர்ப்பு அளித்தார்.

(அ)

# தமிழகத்தில் அரச பாடசாலைகளின் ஆசிரியைகள் சுடிதார் அணியலாம்!

## அமைச்சர் அன்பில் மகேஷ் அறிவிப்பு

*சென்னை, டிசெ. 22*

*பள்ளிக்கல்வித் துறையில் பணியாற்றும் ஆசிரியைகள் சுடிதார் அணிந்து பள்ளிக்கு வரலாம் என்று பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.*

*மாணவர்களுக்கு எளிமையாக பாடம் புகட்டும் ஆசிரியர்களுக்கு "கனவு ஆசிரியர்" திட்டத்தின் கீழ் கனவு ஆசிரியர் விருதும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கி தமிழக அரசு கௌரவித்து வருகிறது.*

*இந்த நிலையில், நாமக்கல் மாவட்டம் திருசெங்கோட்டில் உள்ள தனியார் கல்லூரியில் கனவு ஆசிரியர் விருது விழா கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்த விழாவில் 379 ஆசிரியர்களுக்கான கனவு ஆசிரியர் விருதை அமைச்சர் அன்பில் மகேஸ் வழங்கினார்.*

*பின்னர் இவ்விழாவில் பேசிய அமைச்சர் அன்பில் மகேஷ், "பள்ளிக்கல்வித் துறையில் பணியாற்றும் ஆசிரியைகள் தங்கள் விருப்பப்படி விதிகளுக்கு உட்பட்டு புடவை அல்லது சுடிதார் அணிந்து பள்ளிக்கு வரலாம்.*

*ஆசிரியர்கள் தமக்கு சுலபமான உடையை அணிவதில் தவறில்லை. அதன்மூலம் அவர்களுக்கு ஏற்படும் சிரமங்களை குறைத்துக்கொள்ள முடியும்." எனத் தெரிவித்துள்ளார்.*

*(அ)*

# பொன்முடியின் பதவி பறிப்பு!

## ராஜகண்ணப்பனுக்கு கூடுதலாக உயர் கல்வித்துறை ஒதுக்கீடு?

*சென்னை, டிசெ. 22*

*சொத்து குவிப்பு வழக்கில் 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதால், பொன்முடியின் அமைச்சர் பதவி பறிபோனது. இந்நிலையில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ராஜகண்ணப்பனுக்கு உயர் கல்வித் துறையும் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.*

*வருமானத்துக்கு அதிகமாக சொத்து குவித்ததாக பதிவு செய்யப்பட்ட வழக்கில், தமிழக உயர்கல்வி துறை அமைச்சர் பொன்முடிக்கும், அவரது மனைவி விசாலாட்சிக்கும் தலா 3 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், ரூ.50 லட்சம் அபராதமும் விதித்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.*

*சொத்துக்குவிப்பு வழக்கில் பொன்முடியின் அமைச்சர் பதவி பறிபோன நிலையில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ராஜகண்ணப்பனுக்கு, பொன்முடி கவனித்து வந்த உயர்கல்வித்துறை கூடுதல் பொறுப்பாக வழங்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. முதல்வர் ஸ்டாலின் இது குறித்து ஆளுநருக்கு கடிதம் எழுதியிருப்பதாக கூறப்படுகிறது. அண்மையில், தமிழக போக்குவரத்து துறை அமைச்சர் ஆர். எஸ்.ராஜகண்ணப்பனை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு மாற்றம் செய்து தமிழக அரசு உத்தரவிட்டது குறிப்பிடத்தக்கது.*

*(அ)*

# இமயமலை பிரகடனம் மிகப் பயங்கரமானது!

## விமல் வீரவன்ஸ அச்சம்

**கொழும்பு, டிசெ. 22**

**இமயமலை பிரகடனம் பயங்கரமானது என விமர்சித்துள்ளார் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் சமாதான உடன்படிக்கை தோல்வி அடைந்தது. இதனால் இலங்கையை பிரிக்க முடியாமல்போனது. ஆனால் சூடானை பிரித்தனர். இலங்கையை பிரித்திருந்தால், ஈழத்துக்கு அப்பாற்பட்ட பகுதியில்தான் தெற்காசியாவின் காசா பகுதி அமைந்திருக்கும். பாலஸ்தீன மக்களுக்கு இன்று நடப்பதுதான் சிங்கள மக்களுக்கு நடந்திருக்கும். இது தான் உண்மை கதை.

சமாதான முயற்சி ஏன் தோல்வி அடைந்தது என்பது குறித்து நோர்வே ஆராய்ந்தது. பேராசிரியர்களால் 140 பக்கங்களில் அறிக்கையொன்று வழங்கப்பட்டது. தோல்விக்கான காரணங்கள் அதில் விவரிக்கப்பட்டிருந்தன.

சமஷ்டி ஆதரவு போக்கில் இருந்த சந்திரிகா அம்மையாரின் ஆதரவை பெற்று நடவடிக்கைகளை முன்னெடுக்க அப்போதைய பிரதமர் (ரணில்) தவறியமை முதல் காரணம்.

இலங்கையில் பிக்கு சமூகத்தின் ஆதரவை திறட்ட தவறியமை இரண்டாவது காரணமாகும். அதாவது பிக்குகளின் ஆதரவை திரட்ட உரிய வேலைத்திட்டமொன்று இல்லாமை. வேலைத்திட்டமொன்று இருக்கவில்லை என முழுமையாக கூறவும் முடியாது. சில பிக்குகள் இருக்கவே செய்தனர்.

தற்போதுகூட டயஸ் போராக்கள், சில பிக்குகளை பிடித்துக்கொண்டு இமயமலை பிரகடனம் எனும் திட்டமொன்றை முன்னெடுக்கின்றனர். ரணில் கூறும் 13 இற்கு அப்பால் என்ற யோசனையை விடவும் பயங்கரமான திட்டத்துடன் மீண்டும் வந்துள்ளனர்.

ஜே.வி.பி மற்றும் ஹெல உறுமயவின் ஆதரவு இருக்கவில்லை எனவும் காரணம் கூறப்பட்டிருந்தது. ஆனால் இன்று ஜே.வி.பியிடம் தேசியவாதம் இல்லை. ஊழல் எதிர்ப்பு பற்றி மாத்திரமே குரல் எழுப்புகின்றனர். சந்திரிக்காவும், ரணிலும் கூட நட்புடன் செயற்பட்டு வருகின்றனர்-என்றார். (அ)

## தடம் புரண்டது டிக்கிரி மெனிக்கே



கொழும்பு, டிசெ. 22

நானு ஓயாவிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த டிக்கிரி மெனிக்கே பயணிகள் ரயிலானது, ஹற்றன் மற்றும் கொட்டகலை ரயில் நிலையங்களுக்கு இடையில் சிங்கமலை ரயில் சுரங்கப்பாதைக்கு அருகில் 109 மைல் கல்லுக்கு அருகில் தடம் புரண்டுள்ளது.

நேற்று காலை 7.15 மணியளவில், ரயிலின் மூன்று பெட்டிகள் இவ்வாறு தடம் புரண்டன.

புரண்ட பெட்டிகளில் ஒன்று, ரயில்வே திணைக்களத்துக்குச் சொந்தமான கட்டடத்தில் மோதியதால், கட்டடத்துக்கும் ரயில் பாதைக்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், கொழும்பு கோட்டையில் இருந்து பதுளை வரை செல்லும் ரயில்கள் ஹற்றன் ரயில் நிலையம் வரையிலும், பதுளையில் இருந்து கொழும்பு கோட்டை வரை செல்லும் அனைத்து ரயில்களும் கொட்டகலை ரயில் நிலையம் வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இரண்டு புகையிரதங்களுக்கு இடையில் அரச பஸ்களை கொண்டு பயணிகளை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஹற்றன் ரயில் நிலையம் தெரிவித்துள்ளது. (அ)



## இலங்கைக்கான இந்திய தூதர் கொழும்பில் கடமையேற்றார்!

கொழும்பு, டிசெ. 22

இலங்கைக்கான புதிய இந்திய தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள அந்நாட்டின் சிரேஷ்ட இராஜதந்திரியான ஸ்ரீ சந்தோஷ் ஜா கடமைகளை பொறுப்பேற்றுள்ளார்.

நேற்று முன் தினம் நாட்டை வந்தடைந்த சிரேஷ்ட இராஜதந்திரியான ஸ்ரீ சந்தோஷ் ஜா, கடமைகளை பொறுப்பேற்றதாக இலங்கைக்கான இந்திய தூதரம் தெரிவித்துள்ளது.

ஸ்ரீ சந்தோஷ் ஜா இதற்கு முன்னர் பெல்ஜியத்துக்கான இந்திய தூதுவராக கடமையாற்றியுள்ளார்.

இலங்கைக்கான இந்திய தூதுவராக கடமையாற்றிய கோபால் பாக்லே, அவுஸ்திரேலியாவுக்கான இந்திய தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

## 5 கோடி ரூபாய் கப்பம் கோரியவர் கைது!

கொழும்பு, டிசெ. 22

கொலை அச்சுறுத்தல் விடுத்து 5 கோடி ரூபாய் கப்பம் கோரியவரை கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினர் அங்கொடையில் வைத்துக் கைது செய்தனர்.

மிரிஹான பொலிஸாருக்கு அளிக்கப்பட்ட முறைப்பாடினையடுத்தே இக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளதாகவும், இதன்போது 47 வயதான நபரொருவர் கைது செய்யப்பட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவருக்கும், பாதிக்கப்பட்டவருக்கும் இடையே காணப்பட்ட காணிப் பிரச்னை காரணமாக வெளிநாட்டில் உள்ள தனது உறவினர் ஒருவரின் மகன் ஊடாக இக் கொலை மிரட்டல்களை அந்த நபர் விடுத்து வந்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளைக் குற்றப்புலனாய்வுப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# யானை-மனித மோதல்களை தடுக்க நவீன தொழில்நுட்பம்!

கொழும்பு, டிசெ. 22

யானை-மனித மோதலைக் குறைக்க நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ள நிலையில், அதற்கான முன்னோடித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக வனஜீவராசிகள், வன வளங்கள் பாதுகாப்பு மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தெரிவித்தார்.

பிரகாசமான ஒளி, அதிவேக ஒலி அலைகள் மற்றும் டிரோன் விமானங்கள் உள்ளிட்ட நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நடைமுறைப்படுத்தப்படும் இந்த முன்னோடித் திட்டங்கள் அனுராதபுரம், புத்தளம், அம்பாறை மற்றும் யானை - மனித மோதல்கள் அதிகம் காணப்படும் பிரதேசங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வன வளத்தைப் பாதுகாப்பதே வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணியாகும். நான் அமைச்சராக பதவியேற்ற பின்னர், திணைக்களத்தின் செயற்பாடுகள் புதிய தொழில்நுட்பத்தின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதற்கமைய வனப் பகுதிகளை அண்மித்து வாழும் மக்களின் பாதுகாப்புக்கான உதவிகளை வழங்க எதிர்பார்த்துள்ளோம்.



வன வளம் அவர்களின் வாழ்வாதாரத்துக்கு வழிவகுப்பதாக அமையும் பட்சத்தில் மக்கள் வனத்தை பாதுகாப்பர்.

வனப் பகுதிகளின் எல்லையில் வாழும் மக்கள், வனத்திலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய மூலப்பொருட்கள் பல உள்ளன. வனப்பகுதிகளை அண்மித்து வாழ்வோருக்கு குறித்த மூலப் பொருட்களைத் தேடுவதற்கான அனுமதியை வழங்கும் பட்சத்தில் அவர்களால் வனங்களும் பாதுகாக்கப்படும்.

பசுமை மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் வலுப்படும். சுற்றுச்சூழலிருக்கும் மூலப்பொருட்களை விற்பனை செய்யும் பட்சத்தில் பெருளவான டொலர்களை ஈட்டிக்கொள்ள முடியும். அதனால் மாற்றுச் சிந்தனைகளுடன் செயற்பட எதிர்பார்க்கிறோம்.

நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 29 வீதமாக காணப்படும் வனங்களைக் கொண்டு முழுமையாக பயனடைவதற்கும், பாதிக்கப்பட்ட வனங்களின் பாதுகாப்புக்காக புதிய மரங்களை நடுகைச் செய்யவும் நடவடிக்கை எடுப்போம்.

நாட்டிலுள்ள வன வளத்தை மேம்படுத்தும் வகையில் அதற்கு அவசியமான மரக் கன்றுகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்போம்.

வீதிகளின் இரு மருங்கிலும் மரங்களை நடுவதற்கு அவசியமான ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

மக்களின் வாழ்வாதாரத்துக்கு அவசியமான மரக் கன்றுகளைப் பெற்றுக்கொடுக்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

எமது அமைச்சு கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 135சதவீத இலாபத்தை ஈட்டியுள்ளது. 2022 ஆம் ஆண்டின் ஆரம்ப காலத்தில் 1670 மில்லியன் வருமானம் ஈட்டியிருந்த நிலையில், இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில், 4700 மில்லியன் வருமானம் கிடைத்துள்ளது.

யானை-மனித மோதல் பெரும் பிரச்னையாக உருவெடுத்துள்ளது. இந்த சிறிய நாட்டின் மக்கள் தொகையை போன்றே யானைகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. பல்வேறு நீர்ப்பாசான வேலைத்திட்டங்கள் யானைகளின் பாதைகளுக்கு இடையூறாக அமைந்துள்ளன. மக்களின் விவசாயச் செயற்பாடுகளும் யானைகளின் பாதைகளை பாதிக்கின்றன. மக்கள் வாழும் பகுதிகளுக்குள் யானைகள் நுழைவைத் தடுப்பதற்கு அடுத்த வருடத்தில் ஆயிரம் கிலோ மீற்றர் யானை தடுப்பு வேலிகளை அமைக்க எதிர்பார்க்கிறோம்.-என்றார். (அ)

ஈழநாடு



# இலங்கையில் சீர்குலைந்த பொருளாதாரத்தை கட்டியெழுப்ப நீண்டதூரம் பயணிக்கவேண்டும்

## செஞ்சிலுவை, செம்பிறைச் சங்க பேரவை சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 22

**சீர்குலைவடைந்த பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கு இலங்கை இன்னமும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது.**

**இப்பொருளாதார நெருக்கடியின் விளைவாக வேலையின்மை, சிறுவர் மந்தபோசணை, பொதுச்சுகாதாரக் கட்டமைப்பில் இடைவெளிகள், புத்திஜீவிகள் உள்ளடங்கலாகப் பெருமளவானோரின் புலம்பெயர்வு போன்ற நீண்டகாலப் பாதிப்புக்களுக்கு நாடு முகங்கொடுத்திருப்பதாக செஞ்சிலுவை, செம்பிறைச் சங்கங்களின் சர்வதேச பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.**

இலங்கையின் முதல் அரையாண்டு (ஜனவரி - ஜூன்) பொருளாதார நிலைவரம் குறித்து செஞ்சிலுவை, செம்பிறைச் சங்கங்களின் சர்வதேச பேரவையினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

உயர் பணவீக்கம், ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி, உணவுப்பாதுகாப்பின்மை, எரிபொருள் தட்டுப்பாடு, அத்தியாவசிய மருத்துவசேவை வழங்கலில் இடையூறு, மின்விநியோகத் தடை, வாழ்க்கைத்தர வீழ்ச்சி போன்ற காரணங்களினால் இலங்கை நெருக்கடிக்கு முகங்கொடுத்திருந்தது.

முற்றுமுழுதான சேதன விவசாயத்திட்டம் தோல்வியடைந்தமை அடுத்து உள்நாட்டு விவசாய உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி இந்நெருக்கடியைத் தீவிரப்படுத்தியது.

நாட்டில் சமாதானத்தை நோக்கிய நிலைமாற்றம் இடம்பெற்ற 2010 - 2016 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பொருளாதார வளர்ச்சி சராசரியாக 6.2 சதவீதமாகக் காணப்பட்டது.

இருப்பினும் அதன்பின்னரான ஆண்டுகளில் பொருளாதார வளர்ச்சி வேகம் மந்தகரமடைந்ததுடன், கொவிட் - 19 வைரஸ் பெருந்தொற்று காரணமாக 2020 இல் பொருளாதாரம் 3.6 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது.

அதனைத்தொடர்ந்து உலகளாவிய பொருளாதாரச் சுருக்கம், பொருட்களின் விலையேற்றம், நலிவடைந்த சுற்றுலாத்துறை மற்றும் நிதிப்பற்றாக்குறை என்பன ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைவதற்கு வழிகோலின.

அதுமாத்திரமன்றி இந்நெருக்கடியானது நாட்டின் மொத்த சனத்தொகையில் பெரும்பான்மையானோர் வறுமை, நலிவுற்ற நிலை போன்றவற்றுக்கு முகங்கொடுப்பதற்குக் காரணமாக அமைந்தது.

எனவே அவர்கள் உணவு வேளையைத் தவிர்த்தல், உட்கொள்ளும் அளவின் குறைத்தல், சொத்துக்களை விற்பனை செய்தல் போன்ற உத்திகளைக் கையாண்டதுடன் பாடசாலை செல்லும் மாணவர்களின் எண்ணிக்கையிலும் வீழ்ச்சி ஏற்பட்டது.

மேலும் கடந்த ஆண்டு பொதுமக்கள் மத்தியில் எழுச்சியடைந்த போராட்டங்கள் மற்றும் பேரணிகள், அதிகரித்த மின்கட்டணம், வருமானவரி உயர்வு போன்றவற்றுடன் தொடர்புபட்டதாக இவ்வாண்டின் ஆரம்பத்திலும் தொடர்ந்தன.

இவ்வாறானதொரு பின்னணியில் சீர்குலைவடைந்த பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கு இலங்கை இன்னமும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது.

எரிபொருளுக்கான நீண்ட வரிசைகள், பல மணிநேர மின்வெட்டு, எரிவாயு தட்டுப்பாடு என்பன தற்போது முடிவுக்குக் கொண்டு வரப்பட்டிருப்பினும், வழமைக்கு மாறான பணவீக்கத்தினால் பல மில்லியன் மக்கள் தொடர்ந்து பாதிக்கப்பட்டுவருகின்றனர்.

அதுமாத்திரமன்றி இப்பொருளாதார நெருக்கடியின் விளைவாக வேலையின்மை, சிறுவர் மந்தபோசணை, பொதுச்சுகாதாரக் கட்டமைப்பில் இடைவெளிகள், புத்திஜீவிகள் உள்ளடங்கலாகப் பெருமளவானோரின் புலம்பெயர்வு போன்ற நீண்டகாலப் பாதிப்புக்களுக்கு இலங்கை முகங்கொடுத்திருக்கின்றது-என்றுள்ளது. (அ)

# நான்கு பில்லியன் டொலருக்கும் அதிகமான கையிருப்பு நாட்டில்!

கொழும்பு, டிசெ. 22

இந்த ஆண்டின் இறுதியில் நாட்டில் அதிகாரப்பூர்வ கையிருப்பு நான்கு பில்லியன் அமெரிக்க டொலர்களை விட அதிகமாக காணப்படும் என்றும் இது இந்த வருடத்தில் எதிர்பார்க்கப்பட்ட தொகையை விட அதிகமாகும் என்றும் நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

அரசாங்கத்திற்கு அந்நிய செலாவணி வரவால் மொத்த கையிருப்பு கணிசமாக வலுப்பெற்றுள்ளதுடன் இந்த வருடம் டிசெம்பர் மாதத்தில் அரசாங்கம் 787 மில்லியன் அமெரிக்க டொலர் அந்நியச் செலாவணியைப் பெற்றுள்ளதாக நிதியமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 337 மில்லியன் அமெரிக்க டொலர்களும், ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 200 மில்லியன் அமெரிக்க டொலர்களும், உலக வங்கியிடமிருந்து 250 மில்லியன் அமெரிக்க டொலர்களும் டிசெம்பர் மாதத்தில் அரசாங்கம் இரண்டாவது தவணையாகப் பெற்றுள்ளது.

வரவு செலவுத் திட்டத்தை வலுப்படுத்துவதும் நாட்டின் வெளி கையிருப்புகளை மேம்படுத்துவதும் அரசாங்கத்தின் நோக்கமாகும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வயிற்று வலி எனக்கூறி தப்பிச் சென்றார் கைதி!

கொழும்பு, டிசெ. 22

சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பில் எம்பிலிபிட்டிய பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் நேற்று முன் தினம் பிற்பகல் தப்பிச் சென்றுள்ளார்.

இவ்வாறு தப்பிச் சென்ற கைதி எம்பிலிப்பிட்டிய கதுருகாசர திறந்தவெளி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வயிற்று வலி எனக்கூறி எம்பிலிபிட்டிய பொது வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டார்.

250 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்த குற்றத்துக்காக அவருக்கு 10,000 ரூபா அபராதம் விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தண்டப் பணத்தை செலுத்த முடியாத காரணத்தினால், அவர் எம்பிலிபிட்டிய கதுருகாசர திறந்தவெளி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டார்.

இதேவேளை, அவரது தண்டனை காலம் எதிர்வரும் 12ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளமையும் விசேட அம்சமாகும்.

கைது செய்யப்பட்டவர் 25 வயதுடைய நபர் எம்பிலிப்பிட்டிய வெவ்வத்துர பிரதேசத்தில் வசிப்பவராவார்.

தப்பியோடிய கைதியை கண்டுபிடிக்க சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் எம்பிலிபிட்டிய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

# முள்ளியவளையில் கசிப்பு உற்பத்தி மையம் சிக்கியது

முல்லைத்தீவு, டிசெ. 22

முள்ளியவளைப் பகுதியில் கஞ்சா வியாபாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் சட்டவிரோதமாக கசிப்பு காய்ச்சி விற்பனை செய்யும் இடம் ஒன்று முற்றுகை இடப்பட்டு பெருமளவான பொருட்கள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

அந்தப் பகுதியில் இரகசியமான முறையில் கசிப்பு காய்ச்சி வெளியிடங்களுக்கு விநியோகித்து வருவதாக பொலிஸார், சிறப்பு அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலையடுத்து குறித்த இடம் முற்றுகையிடப்பட்டது.

இதன்போது 9 பீப்பாய்கள் மற்றும் கசிப்புக் காய்ச்ச பயன்படுத்தப்படும் பொருட்கள் என்பன பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டதுடன் இவை மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கையில் முள்ளியவளை பொலிஸார் ஈடுபட்டனர். (அ)

# மாணவிகளை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய ஆசிரியர் கைதானார்!

கொழும்பு, டிசெ. 22

நுவரெலியா மாவட்டத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மூன்று மாணவிகளை பாடசாலையின் ஆய்வு கூடத்தில் வைத்து துஷ்பிரயோகம் செய்தார் என்ற சந்தேகத்தில் அதே பாடசாலையின் ஆசிரியர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார்.

கிதுல்லே பல்லேதோவ பிரதேசத்தில் வசிக்கும் 29 வயதுடைய திருமணமான ஆசிரியர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த ஆசிரியர் மாணவி ஒருவருடன் காதல் உறவில் ஈடுபட்டுள்ளதுடன், அந்த மாணவியின் ஊடாக ஏனைய மாணவிகளும் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளால் கடலில் விடப்பட்டன ஆமைக் குஞ்சுகள்



கொழும்பு, டிசெ. 22

கண்டகுழி வனஜீவராசிகள் திணைக்களத்தினரினால் பராமரிக்கப்பட்டு வந்த ஆமைக் குஞ்சுகள் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளினால் கடலில் விடுவிக்கப்பட்டன.

புத்தளம் கற்பிட்டி கண்டகுழி கடற்கரையில் ஆமைகளால் இடப்படும் முட்டைகளை வனஜீவராசிகள் திணைக்களத்தினர் பாதுகாப்பாக சேகரித்து குஞ்சு பொரித்த பின்னர் அவை கடற்கரையில் விடுவிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், கடந்த மாதம் ஆமை முட்டைகளை சேகரித்து பராமரிப்பு நிலையத்தில் வைக்கப்பட்டு 45 நாட்களின் பின்னர் முட்டையிலிருந்து 27 ஆமைக் குஞ்சுகள் வெளியில் வந்ததாக வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

இதன்போது, புதன்கிழமை மாலை வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் ஆமைப் பராமரிப்பு நிலையத்திற்குச் சென்று குறித்த 27 ஆமைக் குஞ்சுகளை பாதுகாப்பாக கடலில் விட்டனர்.

குறித்த கடலாமை அரியவகையான மஞ்சள் நிறச் சிற்றாமை வகையச் சேர்ந்தது என கற்பிட்டி வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (அ)

# டுபாய் வலையமைப்பு ஊடாக போதைப்பொருள் கடத்திய இருவர் அதிரடிப் படையினரால் கைது!

கொழும்பு, டிசெ. 22

சுமார் 50 இலட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருள் மற்றும் சுமார் இரண்டு கோடி ரூபா பெறுமதியான காருடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் இருவரும் டுபாய் நாட்டிலிருந்து போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்றும் பாணந்துறை வலன மத்திய ஊழல் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

மொரகஹேன கோரல பிரதேசத்தில் உள்ள மூன்று மாடி வீடு ஒன்றில் பாரியளவிலான போதைப்பொருள் கடத்தல் இடம்பெறுவதாக பாணந்துறை வலன மத்திய ஊழல் ஒழிப்பு அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

ஈழநாடு



# உரிய சுற்று நிரூபங்களின் அடிப்படையில் அதிபர்களுக்கான நியமனங்கள் அமையும்

## அமைச்சர் டக்ளஸ் உறுதி

யாழ்ப்பாணம், டிசெ. 22

**அதிபர் நியமனங்களில் தவறுகள் அல்லது முறைகேடுகள் நடைபெற்றிருக்குமாயின் அதுதொடர்பாக ஆராய்ந்து, அவை நிவர்த்திக்கப்படும் என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அரச சுற்று நிரூபங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற நியமனங்களில் தலையிடுவது, மக்களுக்கு செய்கின்ற அநீதியாக அமைந்துவிடும் எனவும் தெரிவித்துள்ளார்.**

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை, வடக்கு மாகாணத்தில் புதிதாக அதிபர் நியமனம் பெற்றுக் கொண்டவர்களுள் ஒரு பகுதியினர் நேற்று சந்தித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புதிதாக அதிபர்களாக நியமிக்கப்பட்டிருப்பவர்களில் ஒரு பகுதியினர் வெளி மாவட்டங்களில் உள்ள வெற்றிடங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

அவ்வாறு நியமிக்கப்பட்டிருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் ஏற்கனவே ஆசிரியர்களாக வெளி மாவட்டங்களில் கடமையாற்றி இருப்பது உட்பட பல்வேறு காரணங்களை முன்வைப்பதுடன், தம்மை சொந்த மாவட்டங்களில் கடமையாற்ற சந்தர்ப்பம் அளிக்குமாறும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை முன்வைத்தனர்.



குறித்த கோரிக்கைகள் தொடர்பாக, சம்மந்தப்பட்ட அதிபர்களின் கருத்துக்களையும் ஆதங்கங்களையும் கேட்டறிந்த அமைச்சர், சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு, குறித்த விடயம் தொடர்பாக பிரஸ்தாபித்தது டன், நியமனங்கள் அனைத்தும் நியாயமானதாகவும் சுற்று நிரூபங்களுக்கு அமைவானதாகவும் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தினார். (அ)

# கரடி தாக்குதலுக்குள்ளான இளைஞன் பதுளை வைத்தியசாலையில் அனுமதி

கொழும்பு, டிசெ. 22

கரடி தாக்குதலுக்கு இலக்கான இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில், பதுளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

புத்தல கதிர்காம பிரதேசத்தை சேர்ந்த 28 வயதுடைய இளைஞரே கரடி தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

குறித்த பிரதேசத்தில் நிலக்கடலை தோட்டத்தில் வேலையில் ஈடுபட்டிருந்த இளைஞனை திடீரென கரடி ஒன்று தோட்டத்திற்குள் புகுந்து அவர் உடலில் பாய்ந்து தாக்கியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர் அருகில் இருந்த நண்பர்கள் கரடியை விரட்டியடித்து அவரை பதுளை போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதியுடன் பேச்சு; எமக்கு அழைப்பில்லை!

## கூறுகின்றார் கஜேந்திரன் எம்.பி.

யாழ்ப்பாணம், டிசெ. 22

தமிழ் தேசிய பரப்பில் இயங்கும் வடக்கு, கிழக்கு தமிழ் கட்சிகளுக்கும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற சந்திப்புக்கான எவ்வித அழைப்பும் தங்களுக்கு கிடைக்கப்பெறவில்லை என தமிழ் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

அதன் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் இதனைத் தெரிவித்தார்.

அவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டாலும், குறித்த சந்திப்பை புறக்கணிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ஒற்றையாட்சிக்குள் அரசியல் தீர்வு எனும் ஜனாதிபதியின் கொள்கையை கைவிட்டால் மாத்திரமே, தமது கட்சி அரசியல் தீர்வு தொடர்பான ஜனாதிபதியின் கலந்துரையாடலில் பங்கேற்கும் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார். (அ)

# சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளரிடம் விசாரணை!

கொழும்பு, டிசெ. 22

தரமற்ற இம்யூனோகுளோபுலின் தடுப்பூசியை கொள்வனவு செய்து மருத்துவமனைகளுக்கு விநியோகித்தமை தொடர்பில், சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் சமன் ரத்நாயக்கவிடம் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

அத்துடன், அவரது அலுவலகத்தில் இருந்து கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் குறித்தும் விசாரணை நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த அண்மையில் விசாரணையின் பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தநிலையில், நாட்டில் சுமார் 2,000 நோயாளிகளுக்கு வழங்கப்பட்ட இம்யூனோகுளோபுலின் தடுப்பூசி தொடர்பாக ஜனக ஸ்ரீ சந்திரகுப்த உட்பட 6 பேர் இதுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இலங்கையர்களை மீட்பது குறித்து பயங்கரவாத குழுவுடன் பேச்சுக்கள்

கொழும்பு, டிசெ. 22

மியன்மாரில் பயங்கரவாதிகளிடம் சிக்கியுள்ள இலங்கையர்களை மீட்பது தொடர்பில் குறித்த பயங்கரவாத குழுவுடனான பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மியன்மார் உள்துறை அமைச்சரின் இணக்கப்பாட்டை தொடர்ந்து பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மியன்மாருக்கான இலங்கை தூதுவர் ஜனக பண்டார தெரிவித்தார்.

மியன்மாரின் தாய்லாந்து எல்லையில் அமைந்துள்ள சைபர் குற்றப் பிரதேசம் என அடையாளப்படுத்தப்படுகின்ற இடத்தில் இலங்கையின் 56 இளைஞர், யுவதிகள் பலவந்தமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தொடர்பாக கடந்த சில தினங்களாக தகவல்கள் வெளியாகின.

மியாவெட்டி நகரத்தில் இருந்து சுமார் 25 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள இந்த பிரதேசம் முழுமையாக பயங்கரவாத குழுவொன்றின் கட்டுப்பாட்டில் உள்ளதால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்களை மீட்பதற்காக இலங்கைத் தூதரகம் கடும் பிரயத்தனம் மேற்கொள்ள நேரிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மியன்மார் இராணுவ அரசாங்கத்தின் பல்வேறு தரப்பினரை சந்தித்து கலந்துரையாடியுள்ளதாக மியன்மாருக்கான இலங்கைத் தூதுவர் கூறினார். (அ)

# பண்டிகை காலத்தை முன்னிட்டு விசேட சோதனை நடவடிக்கைகள்!

கொழும்பு, டிசெ. 22

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில், முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் மூலம் 26 கோடி ரூபாவிற்கும் அதிகமான அபராத தொகை அறவிடப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார சபை தெரிவித்துள்ளது.

ஜனவரி மாதம் முதல் தற்போது வரையில், சுமார் 22 ஆயிரம் சோதனைகள் நடத்தப்பட்டுள்ளதாக அந்த சபை குறிப்பிட்டுள்ளது.

இதனடிப்படையில், 21 ஆயிரம் பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்குகள் மூலம் நீதிமன்றங்கள் ஊடாக 26 கோடியே 76 இலட்சத்து 30 ஆயிரத்து 300 ரூபாய் அபராதமாக அறவிடப்பட்டுள்ளது.

அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்தல், இருப்புக்களை மறைத்து வைத்தல், காலாவதியான பொருட்களை விற்பனை செய்தல், விலைகளை காட்சிப்படுத்தாமை உள்ளிட்ட பல்வேறு குற்றங்களுக்காக வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாக நுகர்வோர் விவகார அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே பண்டிகை காலத்தை முன்னிட்டு விசேட சோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அந்த சபை தெரிவித்துள்ளது. (அ)

# மருத்துவ சேவைக்கு புதிய நியமனங்கள்!

கொழும்பு, டிசெ. 22

மருத்துவ சேவைக்கு உதவி புரிவதற்கான 242 நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேநேரம், மருத்துவ பயிற்சிக் கல்லூரிகளில் இரண்டு ஆண்டுகள் டிப்ளோமா கற்கை நெறியை பூர்த்தி செய்த 163 பேருக்கும் நேற்று முன் தினம் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதுதவிர, 1 வருடம் 3 மாதங்களுக்குள் டிப்ளோமா கற்கை நெறியை பூர்த்தி செய்த 56 சுகாதார ஆய்வுகூட தொழில்நுட்பவி யலாளர்களுக்கும் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமானம் ஒன்றில் கோளாறு

## உடனடியாக தரையிறக்கம்

கொழும்பு, டிசெ. 22

சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவைக்கு சொந்தமான விமானம் ஒன்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட சிறிது நேரத்தில் தொழில்நுட்ப கோளாறு காரணமாக கட்டுநாயக்க விமான நிலையத்தில் மீண்டும் தரையிறக்கப்பட்டது.

201 பயணிகளை ஏற்றிச் சென்ற விமானம் புறப்பட்டு பத்து நிமிடங்களில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டதை யடுத்தே விமானிகள் மீண்டும் விமானத்தை பாதுகாப்பாக தரையிறக்கினர்.

விமானத்தை பழுது பார்ப்பதற்காக வெளிநாட்டுக்கு கொண்டு சென்றால் பெரும் தொகையான நிதியைச் செலவு செய்யும் சூழ்நிலை காணப்பட்டதால் விமானத்தை மீண்டும் கட்டுநாயக்க விமான நிலையத்திலேயே தரையிறக்கியதாக அதன் நிர்வாகிகள் தெரிவித்தனர்.

தற்போது இந்த விமானம் கட்டுநாயக்க விமான நிலைய முற்றத்தில் புனரமைக்கப்பட்டு வருகின்றது. (அ)

இரு பாடசாலை மாணவர்கள் உட்பட

# 10 போதைப்பொருள் சந்தேக நபர்கள் சாய்ந்தமருது பொலிஸாரினால் கைது!

அம்பாறை, டிசெ. 22

**இரு பாடசாலை மாணவர்கள் உட்பட 10 போதைப்பொருள் சந்தேக நபர்களை சாய்ந்தமருது பொலிஸார் கைது செய்துள்ளனர்.**

**விசேட போதைப்பொருள் ஒழிப்பு திட்டத்தை அமுல்படுத்தும் வகையில் பதில் பொலிஸ் மா அதிபரின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளன.**

*இந்நிலையில் அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பல்வேறு பகுதிகளிலும் தேடுதல் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டிருந்தனர்.*

*சீருடை மற்றும் சிவில் உடையில் கடமையில் ஈடுபட்ட பொலிஸ் குழு கடந்த திங்கள் முதல் புதன்கிழமை வரையான 3 நாட்களில் 10 சந்தேக நபர்களை கைது செய்துள்ளது.*

*இப்பொலிஸ் குழுவில் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எல். சம்சுதீன் வழிகாட்டலில் உப பொலிஸ் பரிசோதகர் ரவூப் தலைமையிலான பொலிஸார் சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.*

*இவ்வாறு குறித்த பொலிஸ் குழுவினரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் வசம் இருந்து நாட்டு கஞ்சா ஹெரோயின் ஐஸ் உள்ளிட்ட போதைப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.*

*இக்கைது நடவடிக்கையின் போது கடந்த புதன்கிழமை ஐஸ் போதைப்பொருள் நுகர்ந்த இரு பாடசாலை மாணவர்களை இப்பொலிஸ் குழுவினர் கைது செய்துள்ளனர்.*

*தரம் 9 மற்றும் தரம் 11 இல் கல்வி கற்கும் இம்மாணவர்கள் மாவடிப்பள்ளி பகுதியில் உள்ள பாடசாலையில் கல்வி கற்கின்றனர்.*

*மேலும் சாய்ந்தமருது பகுதியில் பல்வேறு குற்றச்செயலுடன் தொடர்பு பட்ட நிலையில் தலைமறைவாகி இருந்த 5 சந்தேக நபர்களும் இத்தேடுதல் நடவடிக்கையில் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.* (அ)



# பாடசாலை மாணவர்களுக்கான போதையொழிப்பு விழிப்புணர்வு

*திருமலை, டிசெ. 22*

*திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேச செயல பகுதிக்குட்பட்ட சிராஜ் முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் பாடசாலை மாணவர்களுக்கான போதை ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்வு இடம் பெற்றது.*

*தம்பலகாமம் பிரதேச செயலாளரின் வழிகாட்டுதலுக்கிணங்க இடம் பெற்ற இந்நிகழ்வானது " போதை பொருள் அற்ற இளைஞர் தலைமுறை " என்ற தொனிப் பொருளின் கீழ் கடந்த செவ்வாய்க்கிழமை பாடசாலையில் இடம் பெற்றது.*(அ)

# புறாத் தீவு தாற்காலிகமாக பூட்டு

*திருமலை, டிசெ. 22*

*திருகோணமலை நிலாவெளி கடற் பகுதியில் அமைந்துள்ள புறாத்தீவு தேசிய பூங்கா தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் அறிவித்துள்ளது.*

*வடகிழக்கு பருவமழை ஆரம்பமாகியுள்ள நிலையில் கடலில் கொந்தளிப்பு ஏற்படுவதோடு அலையின் வேகமும் அதிகரித்து காணப்படுவதால் இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.*

*அடுத்த ஆண்டு பெப்ரவரி இறுதிவரை இந்த நிலைமை நீடிக்குமென்றும் இதற்கிடையில் கடல் சீரடையும் சில நாட்களில் சுற்றுலா பயணிகள் தீவுக்குச் செல்ல அனுமதிக்கப்படலாம் என்றும் உயர் அதிகாரி மேலும் கூறினார்.*

(அ)

# இரு ஆசிரியர்களுக்கு சேவை நலன் பாராட்டு



*அம்பாறை, டிசெ. 22*

*சம்மாந்துறை வலயத்துக்குட்பட்ட நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்தில் சிறப்பாக பணியாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்களான ரி.காண்டீபன் மற்றும் எஸ்.ரதிதேவன் ஆகியோருக்கான சேவை நலன் பாராட்டு விழா பாடசாலை அதிபர் திருமதி நிலந்தினி ரவிச்சந்திரன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை வெகுசிறப்பாக நடைபெற்றது.*

*பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக்கல்வி பணிமனையின் பாடசாலை வலுவூட்டல் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான வி.ரி. சகாதேவராஜா கலந்து சிறப்பித்தார்.*

*இடமாற்றலாகிச்சென்ற விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர் ரி.காண்டீபன் பற்றி அதிபர் ஆசிரியர்கள் வாழ்த்துரையாற்றினர்.*

*இடமாற்றம் பெற்றுச் சென்ற விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர் ரி.காண்டீபன் ஏற்புரை நிகழ்த்தினார்.*

*வாழ்த்துப்பா பாடி வாழ்த்து மடல் மற்றும் பரிசுகள் வழங்கி வைக்கப்பட்டன.*

*உதவிக்கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா சிறப்புரையாற்றினர்.*

*சிரேஸ்ட ஆசிரியர் ந.கோடீஸ்வரன் நன்றியுரையாற்றினார்.*

(அ)

# பிராந்திய பாலியல் தொற்று நோய்கள், எயிட்ஸ் தடுப்பு பிரிவின் நிறுவன ரீதியான பாராட்டு விழா

*அம்பாறை, டிசெ. 22*



*கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின், தர முகாமைத்துவப் பிரிவின் ஒருங்கிணைப்பில் நடத்தப்பட்டு வரும், பிராந்தியத்திலுள்ள சுகாதார நிறுவனங்களின் தர மேம்பாட்டுக்குப் பங்களிப்புச் செய்த சிறந்த ஊழியர்களைப் பாராட்டும் விழாக்களின் தொடராக, கல்முனை பிராந்திய பாலியல் தொற்று நோய்கள் மற்றும் எயிட்ஸ் தடுப்புப் பிரிவின் நிறுவன ரீதியான பாராட்டு விழா அண்மையில் இடம்பெற்றது.*

*பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.என்.எம். தில்ஷான் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஸக்கீலா இஸ்ஸடீன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.*

*சிறப்பு அதிதிகளாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தர முகாமைத்துவ வைத்திய அதிகாரி எம்.ஏ.எம். ஹில்மி மற்றும் பணிமனையின் திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.ஸி.எம்.மாஹிர் கலந்து கொண்ட இந்நிகழ்வில் பிரிவின் சிறந்த உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.*

(அ)

# மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் மிகச்சிறப்பாக இடம்பெற்ற கலைக்கதம்பம்

*அம்பாறை, டிசெ. 22*



*மண்முனை வடக்குப் பிரதேச செயலகமும் பிரதேச செயலக கலை மன்றங்களும் இணைந்து நடத்திய கலைக்கதம்பம் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை திகதி மண்முனை வடக்குப் பிரதேச செயலக டேபா மண்டபத்தில் இடம்பெற்றது.*

*மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் வ.வாசுதேவன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், உதவி பிரதேச செயலாளர் திருமதி.ல.பிரஷாந்தன், மட்டக்களப்பு மாவட்ட உதவிச் செயலாளர் ஆ.நவேஸ்வரன் மற்றும் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் ஆகியோர் பிரதம அதிதிகளாகவும், கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி ரூபி வலன்ரீனா பிரான்சிஸ் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சு.சிவரெத்தினம் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.*

*இதன்போது நடனம், பாடல்கள், கவிதை, பறங்கியர் நடனம் மற்றும் முஸ்லீம் மாணவர்களின் பாடல்கள் போன்ற நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டன.*

*இந்நிகழ்வில் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களும் அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.* (அ)

# காஸாவில் மீண்டும் வரும் போர் நிறுத்தம்

## எகிப்து செல்லும் ஹமாஸ் தலைவர்

ஜெருசலேம், டிசெ. 22

**காஸாவிலுள்ள பணயக்கைதிகளை விடுவிப்பதற்கு இரண்டாவது மனிதாபிமான போர் நிறுத்தத்துக்கு இஸ்ரேல் தயாராக இருப்பதாக இஸ்ரேல் ஜனாதிபதி ஐசக் ஹெர்சாக் தெரிவித்தார்.**

**ஹமாஸ் அமைப்பினர் பிடித்து சென்ற இஸ்ரேல் பிணைக்கைதிகளை மீட்பதற்காக காஸாவில் ஏழு நாள் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது.**

இதில் 90 இற்கும் மேற்பட்ட பணயக்கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

இதற்கு ஈடாக இஸ்ரேல் சிறைகளில் இருந்து பலஸ்தீனியர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

இருப்பினும் போர் நிறுத்தத்துக்கு பிறகு இஸ்ரேல் தீவிர தாக்குதல் நடத்தி வருகிறது. இதற்கிடையே ஹமாஸ் அமைப்பிடம் இன்னும் 129 பிணைக் கைதிகள் உள்ள நிலையில் காஸாவில் மீண்டும் போர் நிறுத்தத்துக்கான பேச்சுவார்த்தைக்கு முயற்சிகள் நடந்து வருகிறது.

இந்நிலையிலேயே போர் நிறுத்தத்திற்கு இஸ்ரேல் தயாராக இருப்பதாக அந்நாட்டு ஜனாதிபதி ஐசக் ஹெர்சாக் தெரிவித்தார்.



மேலும் போர் நிறுத்தம் மற்றும் கைதிகள் பரிமாற்றம் தொடர்பான பேச்சுவார்த்தைக்கு ஹமாஸ் அமைப்பின் மூத்த தலைவர் இஸ்மாயில் ஹனியே நேற்று எகிப்துக்கு சென்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

காஸாவில் மக்கள் நிவாணர பொருட்கள் கிடைக்காமல் தவித்து வருகின்றனர். உணவு, தண்ணீர், மருந்து ஆகியவற்றுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ)



# 48 வருட சிறைவாசி இறுதியில் நிரபராதி!

நியூயோர்க், டிசெ. 22

அமெரிக்காவின் ஒக்லஹாமா மாநிலத்தில் 48 வருட சிறைவாசத்தின் பின்னர் க்ளின் சிம்மன்ஸ் என்ற நபர் நிரபராதி என தீர்ப்பளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளார்.

1974 ஆம் ஆண்டு கேரலின் சூ ராஜர்ஸ் என்ற நபர் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் க்ளின் சிம்மன்ஸ் சிறையில் அடைக்கப்பட்டார்.

சிம்மன்ஸ் குற்றம் நடந்ததாக கூறப்பட்ட காலகட்டத்தில், லூசியானா மாநிலத்தில் இருந்ததாகவும், இந்த கொலைக்கும் தனக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லையெனவும் கூறியுள்ளார்

ஆனால் நீதிமன்றத்தினால் அவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்ட நிலையில், சில ஆண்டுகளில் மரண தண்டனை சிறை தண்டனையாக மாற்றப்பட்டது.

சிம்மன்ஸ் கைதுசெய்யப்பட்ட போது அவருக்கு 22 வயது என குறிப்பிடப்படுகின்றது.

இந்நிலையில், கடந்த ஜூலை மாதம் குறித்த வழக்கு மீள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

தற்போது இந்த வழக்கில் ஒக்லஹாமா மாவட்ட நீதிமன்றம், சிம்மன்ஸ் குற்றமற்றவர் என கூறி தண்டனையை ரத்து செய்தது.

இதை தொடர்ந்து சிம்மன்ஸ் விடுதலை செய்யப்பட்டுள்ளார். (அ)



# 8 ஆயிரம் குழந்தைகள் காஸாவில் உயிரிழப்பு!

ஜெருசலேம், டிசெ. 22

இஸ்ரேல் இராணுவம் காஸாவில் நடத்தி வரும் தாக்குதல்களினால் இதுவரை உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 20,000 ஐ கடந்துள்ளதாக ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து ஹமாஸின் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் ”காஸா மீது இஸ்ரேல் இராணுவம் நடத்தி வரும் உக்கிர தாக்குதல்களால் காசாவில் நிமிடத்துக்கு நிமிடம் உயிரிழப்புக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

இதுவரை உயிர் இழந்தவர்களின் எண்ணிக்கை 20,000 ஐ கடந்துள்ளது. அதில் 8,000 குழந்தைகள் மற்றும் 6,200 பெண்கள் அடங்குகின்றனர்” இவ்வாறு தெரிவித்துள்ளது.

# செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் பிரிட்டன் தேர்தலில் தாக்கம் செலுத்தும்!

லண்டன், டிசெ. 22

உலகெங்கிலும் நடைபெறும் தேர்தல்களை சீர்குலைக்கச் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில் அது குறித்து பிரிட்டனின் மூத்த அரசியல்வாதிகள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

பிரிட்டனின் ஜனநாயகத்திற்கு தெளிவான மற்றும் தற்போதைய ஆபத்தாக கருதும் இந்த விடயத்தை சமாளிக்க இன்னும் அதிகளவில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என முன்னாள் நீதித்துறை செயலாளர் றொபேர்ட் பக்லண்ட் வலியுறுத்தினார்.



செயற்கை நுண்ணறிவில் உருவாக்கிய தவறான தகவல்களால் ஜனநாயகத்திற்கு ஏற்படும் அச்சுறுத்தல் எதிர்காலத்தைப் பற்றிய கவலையை ஏற்படுத்தும் என முன்னாள் நீதித்துறைச் செயலாளர் தெரிவித்தார்.

மேலும் 2025 ஜனவரிக்குள் நடக்க வேண்டிய அடுத்த பொதுத் தேர்தல், 2017 இல் காணப்பட்ட இடையூறுகளை எதிர்கொள்ளக்கூடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

எவ்வாறாயினும் ஜனநாயகத்தை பாதுகாக்கும் பணிக்குழு மூலம், வெளிநாட்டு தலையீட்டிலிருந்து தேர்தலைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்து வருவதாக பிரிட்டன் அரசாங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# டொலர் பயன்பாட்டை முற்றாக கைவிடுகின்றன சீனா, ரஷ்யா!

## அனைத்துக் கொடுப்பனவுகளும் ரூபிள் மற்றும் யுவானில் செலுத்தப்படும்

பீஜிங், டிசெ. 22

ரஷ்யாவும் சீனாவும் தங்களது இருதரப்பு வர்த்தகத்தில் அமெரிக்க டொலர் உள்ளிட்ட மேற்கத்திய நாணயங்களின் பயன்பாட்டை முற்றிலுமாக கைவிட்டுள்ளது.

ரஷ்ய பிரதமர் மிகைல் மிஷூஸ்டின் இதனை தெரிவித்தார்.

ஏறக்குறைய அனைத்து கொடுப்பனவுகளும் ரூபிள் மற்றும் யுவானில் மேற்கொள்ளப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

ரஷ்ய பிரதமர் இரண்டு நாள் பயணமாக சீனா சென்றுள்ளார்.

இந்நிலையில், பீஜிங்கில் தனது சீனப் பிரதிநிதி லீ கியாங்குடனான சந்திப்பின் போது மிஷூஸ்டின் பேசுகையில் இவ்வாறு கூறியுள்ளார்.

“பரஸ்பர தீர்வுகளில் தேசிய நாணயங்களின் பங்கை நாங்கள் தொடர்ந்து அதிகரித்து வருகிறோம். இந்த ஆண்டு முதல் மூன்றாம் நாடுகளின் நாணயங்களை நாங்கள் முற்றிலும் அகற்றிவிட்டோம்,” என்று மிஷூஸ்டின் கூறியுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான வணிக உறவுகள் வளர்ந்து வருவதாகவும், இருதரப்பு வர்த்தகம் ஏற்கனவே 200 பில்லியன் டொலர்களை எட்டியிருப்பதாகவும் ரஷ்ய தலைவர் வலியுறுத்தினார். இந்த ஆண்டின் தொடக்கத்தில் பீஜிங்கில் நடைபெற்ற கூட்டு வணிக மன்றத்தில் இரு நாடுகளைச் சேர்ந்த 1,500க்கும் மேற்பட்ட தொழில்முனைவோர் கலந்துகொண்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

“ரஷ்ய மற்றும் சீன சந்தைகளில் வணிக நிறுவனங்களின் பணிக்கான வசதியான நிலைமைகளை நாங்கள் உருவாக்குகிறோம். எங்களிடம் விரிவான கூட்டு நிகழ்ச்சி நிரல் உள்ளது,” என்று மிஷூஸ்டின் கூறினார்.

“உலகளாவிய நெருக்கடியின்” பின்னணிக்கு எதிராக ரஷ்யாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான கூட்டாண்மை மிகவும் முக்கியமானது என்றும் லி கியாங் குறிப்பிட்டார்.

சீனாவுடனான தனது வர்த்த கத்தில் அமெரிக்க டொலரை கைவிடுவதைத் தவிர, நிதி உறவுகளை மேம்படுத்தவும், முகாமுக்குள் தீர்வுக்கான வழிமுறை களை உருவாக்கவும் ரஷ்யா பிரிக்ஸ் அமைப்பை வலியுறுத் துகிறது.

திங்களன்று பீஜிங்கில் நடந்த ரஷ்யா-சீனா நிதி உரையாடல் மன்றத்தில் ரஷ்ய நிதியமைச்சர் அன்டன் சிலுவானோவ் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

பிரிக்ஸ் குழு - தற்போது பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாப்பிரிக்காவை உள்ளடக்கியது - உறுப்பு நாடுகளுக்கு இடையே உள்ளூர் நாணயங்களில் பணம் செலுத்துவதற்கான வழிகளைப் பற்றி விவாதித்து வருகிறது.

(அ)

# இமயமலைப் பிரகடனத்தை விடவும் 13ஆவது திருத்தச்சட்டம் சிறந்த தீர்வு

## அரசிடம் உலகத்தமிழர் பேரவையினர் வலியுறுத்தவேண்டும் என்கிறார் சந்திரிகா

கொழும்பு, டிசெ. 22

**உலகத் தமிழர் பேரவையின் 'இமயமலை பிரகடனம்' வரவேற்கத்தக்கதெனினும், இனப்பிரச்சினைக்கான இறுதித்தீர்வாக அரசியலமைப்புத்தீர்வே அமையவேண்டும் என்பதை உலகத்தமிழர் பேரவையினர் அரசாங்கத்திடம் வலியுறுத்த வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.**



அமைதிக்கான மதங்களின் இலங்கை பேரவையின் ஏற்பாட்டில் 'அதிகரித்த பரப்புரை சமூக ஈடுபாடு மற்றும் சிறுவர்கள், குடும்பங்கள், சமூகங்களுக்கான நேர்மறையான நடத்தை விளைவுகள் குறித்து கற்றல் தொடர்பான உயர்மட்ட கலந்துரையாடல்' கலதாரி ஹோட்டலில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு விசேட உரையாற்றுகையிலேயே முன்னாள் ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் 1956 ஆம் ஆண்டிலிருந்து சிறுபான்மையின மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு வந்திருக்கின்றன.

இருப்பினும் நாட்டு மக்கள் எவரும் இனவாதிகளாகவோ அல்லது கடும்போக்குவாதிகளாகவோ இருந்ததில்லை.

மாறாக அரசியல்வாதிகளே தமது அரசியல் சுயலாபங்களுக்காக இனவாதத்தை விதைத்து, இனங்களுக்கு இடையில் பிரிவினைகளை ஏற்படுத்தி வந்திருக்கின்றனர்.

அத்தோடு அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை அரசாங்கம் உடனடியாக முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

நாட்டில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை நிலைநாட்டுவதை முன்னிறுத்தி கலாநிதி ஜெஹான் பெரேராவும், அவரது தலைமையின்கீழ் இயங்கிவரும் தேசிய சமாதானப் பேரவை உறுப்பினர்களும் நீண்டகாலமாகப் பல்வேறு விடயங்களைச் செய்துவருகின்றனர்.

இருப்பினும் எமது நாட்டில் இடம்பெற்ற நீண்டகாலப் போரினால் சமூகத்தின் மத்தியில் மிகவும் ஆழமான பிளவுகள் ஏற்பட்டிருக்கின்றன. இவ்வாறானதொரு சூழ்நிலையில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை அடைந்துகொள்வதை இலக்காகக்கொண்டு செயலாற்றிவருவோருக்கு அதுசார்ந்த உத்வேகத்தை வழங்குமாறு அவர் என்னிடம் கேட்டுக்கொண்டார்.

புதிதாக ஆட்சிபீடமேறும் ஒவ்வொரு அரசாங்கமும், அப்போது நிலவுகின்ற பிரச்னைகளைத் தீர்த்து, சிறுபான்மையின மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுக்க முற்படுகின்ற வேளையில், அதற்கு கடும்போக்குவாதிகளிட மிருந்து எதிர்ப்பு கிளம்பும்.

உண்மையிலேயே நாட்டில் பெரும்பான்மையான மக்கள் போரையோ அல்லது முரண்பாடுகளையோ எப்போதும் விரும்பவில்லை. அவர்கள் அமைதியாகவும், ஒற்றுமையாகவும் வாழ்வதையே முன்னிலைப்படுத்தி வந்திருக்கின்றனர்.

அவ்வாறிருந்தும் இனங்களுக்கு இடையிலான அமைதி, நல்லிணக்கம் என்பன இன்னமும் சாத்தியப்படாமல் இருப்பதற்கு அரசியல்வாதிகளே காரணமாவர். இனங்களுக்கு இடையிலான பிரச்னையை தமது தேர்தல் கோஷமாகப் பயன்படுத்தி வந்திருக்கின்றனர்.

என்னைப் பொறுத்தமட்டில் இலங்கை மக்கள் இனவாதிகளோ, கடும்போக்குவாதிகளோ அல்லர். மாறாக அரசியல்வாதிகளால் தூண்டிவிடப்பட்ட சிலரே அவ்வாறு செயற்படுகின்றனர்.

நான் ஏற்கனவே வாக்குறுதியளித்தவாறு 60 வயதில் அரசியலில் இருந்து முழுமையாக ஓய்வு பெற்றதன் பின்னர், தற்போது இனங்களுக்கிடையில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதை இலக்காகக் கொண்டு இயங்கி வருகின்றேன். ஏனெனில் நான் எனது நாட்டை நேசிக்கின்றேன்.

அதேபோன்று இவையிரண்டுமின்றி எம்மால் நாடு என்ற ரீதியில் முன்நோக்கிப் பயணிக்கமுடியாது என்பதையும் நான் எனது அனுபவத்தின் மூலம் உணர்ந்துகொண்டேன்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர் இன ரீதியான வன்முறைகளை முன்னிலைப்படுத்தியி ருக்காவிடின் அவரால் (கோட்டாபய) அத்தேர்தலில் வெற்றியீட்டியிருக்க முடியாது. உயிர்த்த ஞாயிறுதினப் பயங்கரவாதத் தாக்குதல்கள் மாத்திரமன்றி, அதற்கு முன்னர் முஸ்லிம்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகளும் இதில் உள்ளடங்குகின்றன. இருப்பினும் இரு வருடங்களுக்குள் அவர்கள் பொதுமக்களால் விரட்டியடிக்கப்பட்டனர்.

அரசியல்வாதிகள், மதத்தலைவர்கள், சிவில் சமூகத்தலைவர்கள், ஆசிரியர்கள் உள்ளடங்கலாக சகல துறைசார்ந்த தலைவர்களும் சமாதானத்தை வலியுறுத்தி மக்களிடம் பேசவேண்டும். நான் ஆட்சியிலிருந்தபோது உருவாக்கிய அரசியலமைப்பில் தற்போதைய 13 ஆவது திருத்தத்தை விடவும் பன்மடங்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

இருப்பினும் அதனை ஏனைய அரசியல் கட்சிகள் ஆதரிக்கவில்லை. தற்போது உலகத்தமிழர் பேரவை உறுப்பினர்கள் பௌத்த தேரர்களுடன் இணைந்து தீர்வு செயற்திட்டமொன்றை முன்மொழிந்திருக்கின்றனர்.

அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், மகாநாயக்க தேரர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடன் சந்திப்புக்களை நடத்தியிருக்கின்றனர். அவை வரவேற்கத்தக்க விடயங்களாகும். இருப்பினும் இனங்களுக்கு இடையிலான பிரச்னைக்கான இறுதித் தீர்வாக அரசியலமைப்புத் தீர்வே இருக்க வேண்டும் என்பதை அவர்கள் அரசாங்கத்திடம் வலியுறுத்த வேண்டும்.- என்றார். (அ)

# இந்தியாவிலிருந்து கடத்தப்பட்ட 18 ஆயிரம் போதை மாத்திரைகள்!

## இருவர் அதிரடிப்படையால் கைது

கொழும்பு, டிசெ. 22

போதைப்பொருள் கடத்தலுக்கு எதிரான பாரிய நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மன்னாரில் இரண்டு சந்தேக நபர்களை கைது செய்ததுடன், இந்தியாவிலிருந்து கடத்தி வரப்பட்டதாக நம்பப்படும் சட்ட விரோத போதை மாத்திரைகளையும் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட 18,000 போதை மாத்திரைகளின் பெறுமதி 2.1 மில்லியன் ரூபா என கணிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 23 ஆம் திகதி வரை இந்த சோதனை நடவடிக்கைகள் தொடரும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார். (அ)

# நெருக்கடியில் சிக்கியுள்ள சிறிலங்கன் எயார்லைன்ஸ்

கொழும்பு, டிசெ. 22

தேசிய விமான நிறுவனம் முதலீட்டாளர் ஒருவருக்கு வழங்க முன்மொழியப்பட்டிருந்த போதிலும், இதுவரை அதற்கான செயற்பாடுகள் ஏதும் நிறைவுபெறவில்லை.

இதேவேளை, சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் பல்வேறு பிரச்னைகளால் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

அண்மித்த காலத்தில் அவ்வாறான 17 சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

கட்டுநாயக்காவிலிருந்து பிரான்ஸின் பாரிஸ் விமான நிலையத்துக்கு பயணித்த விமானம் தொழில்நுட்பக் கோளாறினால் மீண்டும் நாட்டுக்கு திரும்ப முடியாத நிலையில் உள்ளது.

யு.எல். 563 எனும் ஏ-330 வகை விமானம் தொடர்ந்தும் சார்ள்ஸ் டி கோல் சர்வதேச விமான நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த விமானம் இலங்கைக்கு திரும்புவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அந்த நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் தெரிவித்துள்ளது.

தொழில்நுட்பக் கோளாறினால் பிரான்ஸில் நேற்று முன்தினம் தரையிறங்கிய விமானத்துடன், தற்போது இயக்கத்தில் இருந்து விலக்கிக் கொள்ளப்பட்ட இலங்கை விமானங்களின் எண்ணிக்கை 9 ஆகும்.

இவற்றில் 5 விமானங்கள் தேவையான கருவிகள் இல்லாமையால் இதுவரை சேவையில் இணைத்துக்கொள்ளப்படவில்லை.

தற்போது இரண்டு விமானங்களின் பராமரிப்பு பணிகள் இடம்பெற்று வருவதாக விமான சேவை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவற்றுக்கு ஊழியர்களின் பற்றாக்குறை பாரிய தடையாக இருப்பதாக, விமானப் பொறியியலாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் கடந்த காலங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டினர்.

இந்த நிலையில், தொழில்நுட்பக் கோளாறுக்குள்ளான விமானத்தின் பராமரிப்புப் பணிகளையேனும் ஆரம்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

2022 ஜனவரி மாதம் முதல் தற்போது வரை 138 அனுபவம் வாய்ந்த விமான தொழில்நுட்ப வல்லுநர்கள் குறித்த சேவைப் பிரிவிலிருந்து வெளியேறியுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானோர் இராஜினாமா செய்துள்ளதுடன், சிலர் பதவி உயர்வு பெற்றும் சிலர் ஓய்வு பெற்றும் சென்றனர்.

விமான சேவை சந்தையில் தற்போதைய தேவையினால், நாட்டின் தற்போதைய சூழ்நிலையை கருத்திற்கொண்டு, இராஜினாமா செய்த பெரும்பாலானோர் ஏனைய விமான நிறுவனங்களில் சேவையில் இணைந்து கொண்டுள்ளனர்.

சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்திற்கு 475 விமான தொழில்நுட்ப வல்லுநர்கள் தேவைப்படுகின்றபோதிலும், தற்போது 380 விமான தொழில்நுட்ப வல்லுநர்களே உள்ளனர்.

அனுபவம் வாய்ந்த வல்லுனர்களின் எண்ணிக்கை 280 ஆகும்.

இதனிடையே, 160 பேரில் 40 பேர் கடந்த காலங்களில் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக சிறிலங்கன் எயார்லைன்ஸின் உரிமம் பெற்ற விமானப் பொறியியலாளர்கள் அண்மையில் தெரிவித்தனர்.

# பாடசாலைகளில் திறன் வகுப்பறை நிறுவுவதற்கு இந்திய அரசு இணக்கம்

கொழும்பு, டிசெ. 22

பெருந்தோட்ட பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் திறன் வகுப்பறைகளை நிறுவுவதற்கான முன்னோடித் திட்டத்துக்கு நிதியுதவியை வழங்க இந்திய அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.



இந்த திட்டத்தின் கீழ், இரண்டு வருடங்களில் நுவரெலியா, கண்டி மற்றும் பதுளை மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பெருந்தோட்டப் பாடசாலைகளில் உயர்தர வகுப்புக்களுக்காக 60 திறன் வகுப்பறைகள் நிறுவப்படவுள்ளன.

குறித்த முன்னோடிக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தேசிய பெறுகை திணைக்களத்தின் விதந்துரைகள் தற்போது வழங்கப்பட்டுள்ளன.

இதன்படி, குறித்த திட்டத்துக்கான செலவு 526.20 மில்லியன் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளதுடன், 2024 ஆம் ஆண்டுக்காக 310 மில்லியன் ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய, கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இந்திய உயர்ஸ்தானிகராலயம் மற்றும் நீர்வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சுக்கும் இடையில் ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த ஒப்பந்தத்தை கையெழுத்திடுவதற்கு அனுமதி கோரி பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

## பொதுச்...

கட்சிக்குள் ஒரு குழு கடுமையாக அழுத்தம் கொடுத்து வருகிறது.

என்றாலும், முன்னாள் அமைச்சர் ரவி கருணா நாயக்கவுக்கு பொதுச் செயலாளர் பதவி வழங்கப்பட வேண்டுமென மற்றுமொரு குழு ஜனாதிபதியும் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரம சிங்கவிடம் வலியுறுத்தியுள்ளது.

ஜனவரி மாத இறுதிக்குள் கட்சியில் பல மறுசீரமைப்புகள் இடம்பெறவுள்ள தாகவும், மேலும் பல பதவிகளில் மாற்றங்கள் இடம்பெறவுள்ள தாகவும் தெரிய வருகிறது.

இதேவேளை, ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டிருந்த முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, கட்சி சார்ப்பற்ற பொது வேட்பாளராக கள மிறக்கக் கூடிய தகுதியுடைய ஒரே வேட் பாளர் ரணில் விக்கிரமசிங்கவே எனத் தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

## எம்மை...

சிரேஷ்ட தலைவரும், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை, வலிந்து காணாமலாக் கப்பட்டோரின் உறவினர்கள் உள்ளடங்கலாக பாதிக்கப்பட்ட தரப் பினருக்கு எவ்வித தீர்வையும் பெற்றுத் தராத உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு முன்மொழிவைத் தம்மால் ஏற்றுக் கொள்ளமுடியாது எனத் தெரிவித்த அவர், அதில் சர்வதேச மேற்பார்வை மற்றும் புதிய நீதிமன்ற முறைமை உள் வாங்கப்படவேண்டியது அவசியம் என சுட்டிக்காட்டினார்.

அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மாகாணசபைகளைப் பலப்படுத்துவது குறித்து ஆராய்வது டன், அடுத்த புதிய பாராளுமன்றம் தெரிவாகி ஒரு வருடத்துக்குள் புதிய அரசியலமைப்பு உருவாக்க நடவடிக் கைகளை முன்னெடுப்பதாக வாக்குறுதி யளித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வுக்கும் வடக்கு - கிழக்கு மாகாணங் களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று வியாழக் கிழமை மாலை 3.00 மணியளவில் கொழும்பில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பை கடந்த 13 ஆம் திகதி நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த நிலையில், பின்னர் அச்சந்திப்பு பிற்போடப் பட்டது.

இதன்போது நல்லிணக்கம் உள் ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட்டது. காணி, மீள் குடியமர்த்தல், நல்லிணக்கத்திற்கு அமைவாக சட்டத்தை நடைமுறைப்படுத்தல், தமிழக அகதி முகாம்களில் இருக்கும் இலங்கையரின் பிரச்சினைகள், அரசியல் தீர்வு விடயங்கள், வடக்கு, கிழக்கு அபிவிருத்தி தொடர்பில் சாத் தியமான கலந்துரையாடல் இடம் பெற்றது.

இந்தச் சந்திப்பில் நீதி மற்றும் சிறைச் சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ, உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன், பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.சம்பந்தன், எஸ்.ராசமாணிக்கம், ஜீ.கருணாகரன்,உ கலையரசன், குலசிங்கம் திலீபன், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பிரதமரின் செயலாளர் அனுர திசாநாயக்க, நீதி மற்றும் சிறைச் சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் வசந்த பெரேரா, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, வன ஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆர். இம்.சீ.எம். ஹேரத், சுற்றாலா மற்றும் காணி அமைச்சின் செயலாளர் எச்.எம்.பீ.பீ.ஹேரத் உள்ளிட்டவர்களும் நல்லிணக்கம் தொடர்பிலான நிறுவனங்களின் பிரதானிகளும் கலந்துகொண்டிருந்தனர். (அ)

## யாழில்...

600 ரூபாவுக்கும், தக்காளிப்பழம் கிலோ 800 ரூபாவுக்கும் , பயிற்றங்காய் கிலோ 600 ரூபாவுக்கும், வெண்டிக்காய் கிலோ 400 ரூபாவுக்கும், பெரிய வெங்காயம் கிலோ 480 ரூபாவுக்கும் , சின்ன வெங் காயம் கிலோ 400 ரூபாவுக்கும் , கீரை ஒரு பிடி 160 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன .

இந்நிலையில் மரக்கறிகளின் விலை அதிகரிப்பால் மக்கள் தமக்கு வேண்டிய மரக்கறிகளை கொள்வனவு செய்வதற்கு தயங்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது (அ)

## இலங்கையின்...

சொல்லும் தொகைக்கு தான் வெங் காயத்தை விற்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.

பெரிய வெங்கா யத்தின் விலையை அதிகரிக்குமாறு இந்திய வர்த்தகர்கள் கூறுவதாகவும் தம்புள்ளை மொத்த வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

தம்புள்ளை பிரதேசத்தில் பெரிய வெங்காய களஞ்சியசாலைகளில் அதிகளவு வெங்காயத்தை சேமித்து வைத்து சந்தையில் பெரிய வெங்காயத் திற்கு தட்டுப்பாடு ஏற்படும் வகையில் மாபியாவொன்று இயங்கி வருவதாக பெரிய வெங்காய மொத்த வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தின் கடைகளில் மட்டுப்படுத் தப்பட்ட அளவு பெரிய வெங்காயம் விற்பனைக்குக் காணப்படுவதாகவும், களஞ்சியசாலைகளில் பெரிய வெங்கா யம் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் வர்த்தகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் இந்த நாட்களில் பாகிஸ் தான், இந்தியா மற்றும் துருக்கி ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ பெரிய வெங் காயம் 420 முதல் 600 ரூபா வரை மொத்த விலையில் விற்பனை செய்யப் படுவதாகவும் வர்த்தகர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தை அண்மித்த பகுதிகளிலும், தம்புள்ளை பிரதேச செயலகப் பிரிவின் கலேவெல பிரதேச செயலர் பிரிவிலும், அதனை அண்மித்த பகுதிகளிலும், வெளி நாடுகளில் இருந்து கொண்டு வரப்படும் பெரிய வெங்காயம் பாரிய களஞ்சியசாலைகளில் களஞ்சியப்படுத் தப்பட்டுள்ளதாக வர்த்தகர் எம்.ஜி.ஃ பாசில் குறிப்பிட்டார்.

மேலும் தட்டுப்பாடு இருப்பது போல் நடித்து பெரும் லாபத்தை வைத்து மிக நுட்பமாக விற்பனை செய்து வருகின்றனர்.

இந்த பெரிய வெங்காயம் அதிக விலைக்கு இறக்குமதி செய்யப்படாத தாலும், பண்டிகைக் காலத்தை முன் னிட்டு பெரிய வெங்காயத்தின் விலையை உயர்த்தும் மோசடியில் ஈடுபடுவதாலும் இந்த கடத்தலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றும் வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உள்ளூர் வெங்காயச் செய்கையை முற்றாக முடக்குவது, கடத்தலுக்கு களம் அமைக்கும் செயலாகும் என அகில இலங்கை விவசாய சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் நாமல் கருணா ரத்ன தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலும் உள்ள பெரிய வெங்காயத்தின் விலையை ஒரு சில இந்திய மற்றும் இலங்கை வர்த்தகர்கள் தீர்மானித்து பெரிய அளவில் கொள்ளை யடிக்கிறார்கள் எனவும் அரசாங்கமும் பொறுப்பு வாய்ந்த அமைச்சர்களும் அமைதியாக காத்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

உள்ளூர் பெரிய வெங்காயச் செய்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் நாமல் கருணாரத்ன குற்றம் சுமத்துவது டன், இந்த பெரிய வெங்காயத்தை மறைத்து விற்பனை செய்யும் கடத்தல் காரர்களுக்கு உரிய தண்டனை வழங்கு மாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார். (அ)

# நாமலுக்கு பதவி வழங்க பஸில் ராஜபக்ஷ எதிர்ப்பு

கொழும்பு, டிசெ. 22

ஆளும் பொதுஜன பெரமுன கட்சிக் குள் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரி வித்துள்ளன.

பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய மாநாடு அண்மையில் இடம் பெற்றிருந்தது. இதில் மகிந்த ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட கட்சியின் முக்கிய தலைவர்கள் கலந்துகொண்டி ருந்தனர்.

கட்சியின் தலைவராக மீண்டும் மகிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டார். மாநாடு நிறைவடைந்த பின்னர் அண் மையில் ஊடகவியலாளர்களிடம் பேசிய அவர் அரசியலில் இருந்து ஓய்வு பெறும் எண்ணம் கிடையாது என கூறியிருந்தார்.

இந்த மாநாடு முடிந்த நிலையில், கட்சியின் நிறைவேற்று சபையும் கூடியி ருந்தது. இதன் போது கட்சியின் முக்கிய பதிவிகளுக்கு உறுப்பினர்கள் நியமிக்கப் பட்டனர்.

அந்த வகையில், கட்சியின் செயலாள ராக சாகர காரியவசம் மீண்டும் நியமிக் கப்பட்டிருந்தார். எனினும், முக்கியப் பதவியான தேசிய அமைப்பாளர் பதவிக்கு யாரும் நியமிக்கப்படவில்லை.

முன்னதாக கட்சியின் தேசிய அமைப்பாளராக முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ செயற்பட்டு வந்த நிலையில், தற்போது அந்தப் பதவி வெற்றிடமாகியுள்ளது.

இந்நிலையிலேயே, பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பதவியை பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு வழங்குவதற்கு பசில் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின் றன.

இந்த வருட மாநாடு மற்றும் நிறை வேற்று சபையில் நாமலின் பெயர் அந்த பதவிக்கு முன்மொழியப்படவி ருந்த நிலையில், எதிர்ப்பு காரணமாக அந்த பிரேரணைக்கான அங்கீகாரம் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## குடத்தனையில்...

தரப்பில் மூவருமாக 07 பேர் காயம டைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை நேற்று தினம் புதன் கிழமை இரவு , ஒரு தரப்பினர் மற்றைய தரப்பின் மீது தாக்குதல் மேற்கொள்ள தயாரானபோது சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸ் விசேட அதிரடி படையினர் மற்றும் பொலிஸார் அங்கு கூடியிருந்தவர்களை அப்புறப்படுத்தி வீடுகளுக்கு அனுப்பி வைத்தனர்.

சில மணிநேரம் அங்கு பாதுகாப்பு கடமையில் ஈடுபட்ட பின்னர் பொலிஸ் விசேட அதிரடி படையினர் மற்றும் பொலிஸார் , அவ்விடத்தில் இருந்து திரும்பிய பின்னர்.

மீண்டும் ஒன்று கூடிய சிலர் மற்றைய தரப்பினர்களின் வீடுகள் மீது கல் வீச்சு தாக்குதலை மேற்கொண்டனர் என தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

## மாகாண...

கலந்துரையாடலின் போது இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் நல்லிணக்க ஆணைக் குழுவை சட்டமாக்குவதற்கு நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இயங்கும் தமிழ்க் கட்சிகள் யோசனை ஒன்றை முன்வைத்துள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக் கும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங் களில் இயங்கும் தமிழ் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு ஜனாதிபதி செய லகத்தில் நேற்று இடம்பெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், இராசமாணிக்கம் சாணக்கியன், தவராசா கலையரசன் மற் றும் கோவிந்தன் கருணாகரம், குலசிங் கம் திலீபன் ஆகியோர் இந்த சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

புதிய அரசியலமைப்பு தொடர்பில் இதன்போது ஜனாதிபதி கருத்துரைத் துள்ளதுடன், அதற்கு தமிழ் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பை வெளியிட்டதாக தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, 13ஆம் திருத்தச் சட் டத்தை முழுமையாக அமுல்படுத்தி, பிர தேச செயலகங்களை மாகாண சபைக் குள் கொண்டு வருவதற்கு ஜனாதிபதி உறுதியளித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார். (அ)

## யாழ்.தேவி...

யாழ்தேவி கடுகதி ரயில் நேற்று வியாழக் கிழமை மாலை 07 மணியளவில் மஹவ ரயில் நிலையத்தில் தடம் புரண்டதால் வடக்கு ரயில் பாதையின் ரயில் சேவை கள் பாதிக்கப்பட் டுள்ளன. (அ)

## மன்னார்...

பயிற்சியில் ஈடுபட்டார்.

அதன்பின்னர் அவர் 2004 ஒக்ரோபர் முதல் 2015 ஆண்டு மே மாதம் வரையில் தொழில் திணைக்களத்தின் பிரதித் தொழில் ஆணையாளராகப் பணியாற் றினார்.

2015 ஜூன் முதல் 2019 செப்ரெம்பர் வரையில் மருதங்கேணிப் பிரதேச செய லாளராகவும், 2019 ஒக்டோபர் முதல் 2019 டிசெம்பர் வரையில் யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக அரச அதிபராகவும் அவர் பணியாற்றினார்.

2019 டிசெம்பர் 16 முதல் 2023 நவம் பர் 21 வரையில் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபராகப் பணியாற்றிய வேளை நிர்வாக சேவை விசேட தரத்துக் குத் தேர்வாகிய அவர், 2023 நவம்பர் 22 முதல் தற்போது வரை வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராகப் பணியாற்றுகின்றார்.

இந்தநிலையில் நாளை சனிக்கிழமை முதல் மன்னார் மாவட்ட அரச அதிபரா கப் பதவியேற்கும் வகையில் நேற்று வியாழக்கிழமை அவருக்கு நியமனக் கடிதம் வழங்கப்பட்டது. (அ)

## மொட்டு...

கடுமையாக விமர்சித்துள்ள அவர், நாட்டின் பொருளாதாரத்தை மீட்பதற் கான தற்போதைய ஜனாதிபதியின் திறன் குறித்து தனக்கு சிறிதளவும் நம்பிக்கை இல்லை எனவும் கூறினார்.

தற்போதைய பொருளாதார நெருக் கடிகளுக்கு ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான நல்லாட்சி அரசாங்கமே காரணம் என தெரிவித்துள்ள உதயங்க, 2015 முதல் 2019 வரை கடன் பெருமள வுக்கு அதிகரித்தமைக்கு நல்லாட்சி அரசாங்கமே காரணம் என குறிப்பிட் டார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தி லேயே கடன் பல மடங்காக அதிகரித் தது. எங்கள் கட்சி ரணில் விக்கிரமசிங் கவை ஜனாதிபதியாக தெரிவு செய்துள் ளதால் அவருக்கு ஆதரவளிக்க வேண் டும். ஆனால் அவரால் பொருளா தாரத் திற்கு புத்துயிர் அளிக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கில்லை என அவர் கூறி னார்.

ஜனாதிபதி தேர்தலிற்கு முன்னர் பாராளுமன்றத் தேர்தலே இடம்பெறும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

பொதுஜன பெரமுன தனது வேட்பா ளரை நிறுத்தும். ரணில் விக்கிரமசிங் கவை கட்சி நியமிக்காது ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் போட்டியிட மாட்டார் என உங்களுக்கு உறுதியளிக்க முடியும் எனவும் அவர் கூறினார். (அ)

ஈழநாடு
Eelanadu

# நல்லூர் சிவன் கோவிலில் பிரம்ம சிரச்சேத உற்சவம்







(படங்கள் : ஐ.சிவசாந்தன்

யாழ்ப்பாணம், டிசெ. 22

படைத்தல் கடவுளான பிரம்மாவின் ஆணவம் நீங்கும் வண்ணம் அவரது ஐந்தாவது தலையை சிவபெருமான் கிள்ளி அகற்றி, நான்முகனாக்கிய நிகழ்வு அட்ட வீரச்செயல்களுள் ஒன்றாக குறிப்பிடப்படுகிறது.

'பரமனை மதித்திடா பங்கையாசனன் ஒரு தலை கிள்ளியே..' என்ற பாடலடி இப்புராண காலத்து நிகழ்வையே எடுத்துக்காட்டுகிறது.

பிரம்மனின் ஆணவத்தை அகற்றி, அருளொளி பரப்பிய சிவனின் திருவிளையாடல் நேற்று முன் தினம் புதன் கிழமை நல்லூர் சிவன் கோவிலில் பிரம்ம சிரச்சேத உற்சவமாக நிகழ்த்தப்பட்டது. (அ)

# டெங்கு அபராதத்தால் அரசுக்கு ஐந்து மில்லியன் ரூபா வருவாய்

கொழும்பு, டிசெ. 22

டெங்கு பரவும் வகையில் சுற்றுச்சூழலை அசுத்தமாக வைத்திருந்தவர்களுக்கு வழங்கப்பட்ட அபராதத்தின் மூலம் சுமார் 5,704,500.00 மில்லியன் ரூபாய் அரசுக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் விசேட வைத்திய நிபுணர் ருவண் விஜேமுனி தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுற்றுச்சூழலை பாதுகாப்பற்ற மற்றும் டெங்கு பரவும் அபாயத்துடன் தூய்மையற்ற முறையில் வைத்திருந்த சுமார் 16860 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்தவருடம் ஆரம்பம் முதல் இறுதிவரை 71,6213 இடங்களில் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் அதில் 16860 இடங்கள் டெங்கு முட்டையிட்டு இனத்தை பெருக்கும் இடமாக அடையாளம் காணப்பட்டன.

மேலும், அடையாளம் காணப்பட்ட 16,860 இடங்களில் 1788 இடங்களில் முட்டைகள் இட்டு நுளம்புகள் இனம்பெருக்குவதற்கு தயாராக இருந்தன.

இந்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின் போது, 4332 இடங்களுக்குரியவர்களுக்கு எச்சரிக்கை துண்டுபிரசுரம் வழங்கி முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டது. 808பேருக்கு சிவப்பு எச்சரிக்கை விடுத்து பணம் அறவிடப்பட்டது- என்றார். (அ)

# எம்மை அழைத்து வந்ததும் பிரிட்டன்தான் அம்போ என கைவிட்டதும் அந்த நாடுதான்!

## வலி சுமந்த வரலாற்றை தூதுவரிடம் எடுத்துரைத்த மனோ

கொழும்பு, டிசெ. 22

**"இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மலையக தமிழர் தொடர்பில் பிரித்தானியாவுக்கு பாரிய கடப்பாடு உண்டு. 200 வருடங்களுக்கு முன் 1823 இல் இருந்து எங்களை இலங்கைக்கு, பிரிட்டிஷ் இந்தியாவில் இருந்து அழைத்து வந்ததும் நீங்கள்தான். 1948 இல் எங்களை அம்போ என கைவிட்டு போனதும் நீங்கள்தான். இதை சொல்லி குற்றச்சாட்டு பத்திரிக்கை படிக்க நான் இங்கே வரவில்லை. உங்களுக்கு இந்த வரலாற்றை ஞாபகப்படுத்தவே வந்துள்ளேன். வரலாற்றை மனதில் கொண்டு, இந்த நிகழ்காலத்தில் இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மலையக தமிழருக்கு நீங்கள் உதவிடுங்கள், என நட்புரீதியாக உங்களை நான் தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர் என்ற முறையில் கோருகிறேன்."**

-இவ்வாறு இலங்கையில் பிரிட்டன் தூதுவராக பொறுப்பேற்றுள்ள அன்ரூ பற்றிக்கை சந்தித்த போது தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கூறியுள்ளார்.

தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பில் தலைவர் மனோ கணேசன் எம்.பி. மற்றும் பிரதித் தலைவர் வி. இராதாகிருஷ்ணன் எம்.பி. மற்றும் பிரிட்டன் தூதுவர் அன்ரூ பற்றிக் ஆகியோர் இடையிலான கலந்துரையாடல் கொழும்பில் உள்ள பிரிட்டன் தூதரகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

பிரிட்டன் தூதுவரிடம் கோரிக்கை ஆவணத்தை கையளித்த மனோ கணேசன் இது தொடர்பில் மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றம் வரும் போதெல்லாம், 1948இல் இலங்கையின் வெளிநாட்டு வைப்பு, ஜப்பானுக்கு அடுத்தப்படியாக ஆசியாவில் அதிகமாக இருந்தது என்று சொல்லுவார். அது உண்மை. அன்று இலங்கையில் இருந்த ஒரே ஏற்றுமதி தொழில் தேயிலை இறப்பர் பெருந்தோட்ட தொழில் துறை தான். ஆகவே ரணிலின் கூற்றின் பின்னணி என்னவென்றால், அந்த அதிகூடிய வெளிநாட்டு வைப்புக்கு காரணம், எமது மக்களின் உழைப்பு, வியர்வை, இரத்தம் ஆகியவைதான் என்பதை பிரிட்டன் உணர வேண்டும்.

ஆனால், 1948இல் சுதந்திரத்தின் பின் இலங்கை அமைந்த முதல் அரசாங்கம் தந்த பரிசு, எமது குடியுரிமை பறிப்பு, வாக்குரிமை பறிப்பு ஆகியவைதான். ஆனால், இங்கேதான் பிரித்தானியாவின் பொறுப்பு தவறல் நிகழ்ந்தது. 1948 இல் இலங்கை குடியரசு ஆகவில்லை. 1972 வரை எமது நாடு டொமினியன் அந்தஸ்த்தில் இருந்தது. பிரிட்டன் மகாராணிதான் எங்கள் நாட்டு தலைவராக 1972 வரை இருந்தார். இங்கே அவரது பிரதிநிதி மகா தேசாதிபதி இருந்தார்.



ஆகவே பிரித்தானியா மகாராணியின் அரசாங்கத்தின் கண்களுக்கு முன்தான் இந்த உலக மகா அநீதி நிகழ்ந்து. எமது குடியுரிமையும், வாக்குரிமையையும் பறித்து எம்மை நாடு கடத்திய போது பிரிட்டன் பார்த்துக் கொண்டு இருந்தது. கால்நடைகளை பகிர்ந்து கொண்டதை போன்று இந்தியாவும் எமது மக்களை சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் உள்வாங்கிகொண்டது.

இதனால் எங்கள் அரசியல் அதிகாரம் இலங்கையில் பலவீனமடைந்தது. அந்த சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் இல்லாவிட்டால் இன்று இலங்கை பாராளுமன்றத்தில் 25 மலையக தமிழ் எம்.பிக்கள் இருந்திருப்போம். வடக்கு -கிழக்கு தமிழ் சகோதர எம்.பிகளுடன் சேர்த்து இலங்கையில் 50 தமிழ் எம்.பிக்களுக்கு குறையாமல் பலமாக இருந்திருப்போம். அப்படியானால், இலங்கையின் இனப்பிரச்னை இந்தளவு மோசமடைந்து இருக்காது. இவை அனைத்துக்கும் ஆரம்பம், 1948இல் சுதந்திரத்தின் பின் மலையக தமிழ் மக்களின் குடியுரிமை பறிப்பு, வாக்குரிமை பறிப்பு ஆகியவைதான்.

இலங்கையில் இருந்து இந்தியா போன மலையக மக்களை மீண்டும் இங்கு கூட்டி வர முடியாது. அவர்கள் வரவும் மாட்டார்கள். ஆனால், நாம் பலவீனமடைந்த தன் காரணமானாக எமது இனம் இந்நாட்டில் இழந்த கல்வி, சமூக, பொருளாதார உரிமைகள் எண்ணிடலங்கா. எமது பின்தங்கிய நிலைமைக்கும் இவையே காரணம்.

ஆகவே பிரிட்டன் முன்வந்து, எமது இனம் இந்நாட்டில் நமது இனம் இழந்த உரிமைகளை பெற்றுத்தர உதவிடவேண்டும். இது தொடர்பில் மேலதிக பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க தமிழ் முற்போக்கு கூட்டணியினராகிய நாம் தயார்-என்றார்.

(அ)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட முல்லை மக்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் உலர் உணவுப் பொதி

முல்லைத்தீவு, டிசெ. 22

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடும் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தினரால் பல இலட்சம் பெறுமதியான உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டன.

அந்தவகையில், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பனிக்கன்குளம் கிராம சேவையாளர் பிரிவில் 24 குடும்பங்களுக்கும், மாங்குளம் மாவீரர் வீட்டுத்திட்டத்திலுள்ள 40 குடும்பங்களுக்கும், அம்பகாமம் கிராமசேவைகர் பிரிவிலுள்ள 12 குடும்பங்களுக்கும், புலுமச்சிநாதகுளம் கிராமசேவகர் பிரிவிலுள்ள 17 குடும்பங்களுக்கும், கரைத்துறைப்பற்று பிரதேச செயலர் பரிவிற்க்குட்பட்ட கேப்பாப்பிலவு குடியிருப்பை சேர்ந்த 07 குடும்பங்களுக்கும், உலருணவு வழங்கப்பட்டதுடன் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் இடைத்தங்கல் முகாமிலுள்ள பண்டாரவன்னி, 04ஆம் கண்டம் பிரதேசத்தை சேர்ந்த 60 குடும்பங்களுக்கும், கூழாமுறிப்பு கிராமத்தை சேர்ந்த 70 குடும்பங்களுக்கும்



28,000 ரூபா பெறுமதியான இரவு உணவு வழங்கப்பட்டன.

இவ் உதவிகளை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள், தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கினார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.12.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



# முகமது ஷமிக்கு அர்ஜூனா விருது

### சச்சின், கங்குலி வரிசையில் இணைகிறார்

இந்தியாவில் விளையாட்டு துறையில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கு வழங்கப்படும் இரண்டாவது உயரிய விருதாக அர்ஜூனா விருது கருதப்படுகிறது.

அண்மையில் இந்தியாவில் நடந்து முடிந்த உலகக் கிண்ணத் தொடரில் 7 இன்னிங்சில் ஆடிய முகமது ஷமி 24 விக்கெட்டுகள் வீழ்த்தி பல போட்டிகளில் இந்திய அணியின் வெற்றிக்கு வழிசமைத்திருந்தார்.

சிறந்த பந்துவீச்சாக 57 ஓட்டங்களை கொடுத்து 7 விக்கெட்டுகளை கைப்பற்றியிருந்தார். இதன்மூலம் இந்த தொடரில் அதிக விக்கெட்டுகள் கைப்பற்றிய வீரர் என்ற விருதை சமி தட்டிச் சென்றார்.

இதற்கிடையே, விளையாட்டு அமைச்சிடம் இந்திய கிரிக்கெட் சபை சிறப்பு கோரிக்கையை முன்வைத்து முகமது ஷமியின் பெயரை அர்ஜூனா விருதுக்கு பரிந்துரை செய்திருந்தது.

இந்நிலையில், இந்த ஆண்டுக்கான விளையாட்டு விருதுகளை மத்திய அரசு அறிவித்துள்ளது.

மேஜர் தயான்சந்த் கேல் ரத்னா விருது டேபிள் டென்னிஸ் வீரர்களான சிராக் சந்திரசேகர் ஷெட்டி, சாத்விக் ஜெயராஜ் ஜோடிக்கு அளிக்கப்படுகிறது.

இந்திய கிரிக்கெட் வீரர் முகமது ஷமி, பிரக்ஞானந்தாவின் சகோதரி வைஷாலி உள்பட 26 பேர் அர்ஜூனா விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

ஏற்கனவே கவுதம் கம்பீர், ஹர்பஜன் சிங், வீரேந்திர சேவாக், ராகுல் டிராவிட், சவுரவ் கங்குலி, ரவி சாஸ்திரி, சச்சின் டெண்டுல்கர், அனில் கும்ப்ளே உள்ளிட்ட கிரிக்கெட் வீரர்களுக்கு அர்ஜூனா விருது வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று அர்ஜூனா விருதை பெறும் முதல் இஸ்லாமியராகவும் முகமது ஷமி பதிவாகியுள்ளார்.

இதற்கு முன்னர் இந்திய அணியில் இடம்பெற்றிருந்த இஸ்லாமிய வீரர்கள் எவரின் பெயரும் அர்ஜூனா விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டிருக்கவில்லை என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

# விலகினார் குர்ரம் ஷாசாத்



பாகிஸ்தான் மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய இரு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடரிலிருந்து பாகிஸ்தான் வீரரான குர்ரம் ஷாசாத் விலகியுள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.

இந்த இரு அணிகளுக்கும் இடையே நடந்து முடிந்த முதலாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியா அணி 360 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று, 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இதையடுத்து, இந்த இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்நிலையில், நடந்து முடிந்த டெஸ்ட் தொடரில் விளையாடி காயமடைந்த பாகிஸ்தான் அணியை சேர்ந்த வேகப்பந்து வீச்சாளர் குர்ரம் ஷாசாத் தனது அணியிலிருந்து விலகியுள்ளார்.

அவருக்கு பதிலாக அடுத்தடுத்த டெஸ்ட் போட்டிகளில் விளையாடப்போகும் மாற்று வீரர் யார் என இன்னும் அறிவிக்கப்படவில்லை.

குர்ரம் ஷாசாத் முதல் டெஸ்ட் போட்டியில் 2 இன்னிங்ஸ்களையும் சேர்த்து 5 விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார்.

# சிறந்த விளையாட்டு ஆளுமைக்கான 'பிபிசி' விருதை வென்றார் மேரி ஏர்ப்ஸ்



இங்கிலாந்து மற்றும் மான்செஸ்டர் யுனைடெட் அணிகளின் கோல் காப்பாளர் மேரி ஏர்ப்ஸ் 2023ஆம் ஆண்டின் சிறந்த விளையாட்டு ஆளுமை என்ற பிபிசியின் விருதை வென்றுள்ளார்.

30 வயதான ஏர்ப்ஸ் உலகளாவிய ரீதியில் பிபிசி நடத்திய பொது வாக்கெடுப்பில் முதலிடம் பிடித்தார்.

கிரிக்கெட் வீரர் ஸ்டூவர்ட் பிராட் இரண்டாவது இடத்தையும், உலக ஹெப்டத்லான் சம்பியன் கத்தரினா ஜான்சன்-தாம்சன் மூன்றாவது இடத்தையும் பிடித்தார்.

2022 இல் ஆர்சனல் அணியின் பெத் மீட்க்குப் பிறகு பிபிசி விருதை வென்ற இரண்டாவது பெண் உதைபந்து வீராங்கனை இவர் ஆவார்.

"நான் ஒரு கேம் சேஞ்சராக இருக்க முயற்சிக்கிறேன்," என்று விருதை வென்ற ஏர்ப்ஸ் பிபிசியிடம் கூறினார்.

"நான் பூமியில் வாழும் இந்த சிறிய காலத்தில் உலகை மாற்ற முயற்சிக்கிறேன். ஒரு முன்மாதிரியாக இருப்பதற்கான பொறுப்பை கொண்டுள்ளேன். முடிந்தவரை பலரை ஊக்குவிக்க முயற்சிக்கிறேன். இளைஞர்கள், வயதானவர்கள் எவராயினும் அவர்களை ஊக்குவிப்பேன்." என ஏர்ப்ஸ் கூறினார்.

சிறந்த மகளிர் கோல் காப்பாளருக்கான பிபா விருதையும் மேரி ஏர்ப்ஸ் 2022ஆம் ஆண்டு பெற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# மலிங்கவுடன் இணையும் நுவான் துஷார

இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு 20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக்கில் மும்பை இந்தியன்ஸ் அணியில் இலங்கையின் வேகப்பந்துவீச்சாளரான நுவான் துஷார விளையாடவுள்ளார்.

ஐ.பி.எல்லின் அடுத்தாண்டுத் தொடருக்கான ஏலத்தில் 4.8 கோடி இந்திய ரூபாய்களுக்கு மும்பையால் வாங்கப்பட்டமையை அடுத்தே அவ் அணிக்காக துஷார விளையாடவுள்ளார்.

அந்தவகையில் மும்பையின் பந்துவீச்சுப் பயிற்சியாளர் லசித் மலிங்கவால் முதலில் அடையாளங் காணப்பட்ட 29 வயதான துஷார, அணியில் அவரின் கீழ் பயிற்சிகளைப் பெறவுள்ளார். (அ)

# பாபர் அசாம் முதலிடம்

ஒருநாள் கிரிக்கெட்டில் சிறந்த துடுப்பாட்ட வீரர்களின் புதிய பட்டியலை ஐசிசி வெளியிட்டுள்ளது.

இதில் முதலிடத்தில் இருந்த இந்தியாவின் சுப்மன் கில் 810 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திற்கு தள்ளப்பட்ட நிலையில் முதலிடத்திற்கு பாகிஸ்தானின் பாபர் அசாம் முன்னேறியுள்ளார்.

அவரின் புள்ளிகள் 824 ஆக உள்ளது. மூன்றாவது இடத்தில் இந்திய அணி நட்சத்திர வீரர் விராட் கோலி (775 புள்ளிகள்) உள்ளார்.

ரோகித் சர்மா நான்காவது இடத்திலும் (754 புள்ளிகள்), டேவிட் வார்னர் ஐந்தாவது இடத்திலும் (754 புள்ளிகள்) உள்ளனர்.

முதல் பத்து இடங்களில் இலங்கை வீரர்கள் ஒருவர் கூட இடம்பெறவில்லை.



# நான் எதிர்பார்க்கவில்லை!



ஐ.பி.எல். கிரிக்கெட் ஏலத்தில் இதுவரை இல்லாத அளவுக்கு அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் மிட்செல் ஸ்டார்க் இந்திய மதிப்பின்படி, 24 3/4 கோடி ரூபாய்க்கு விலை போயிருக்கிறார்.

33 வயதான இவர் சமீபத்தில் நடந்த உலகக் கிண்ணப் போட்டியில் 16 விக்கெட்டுகளை (10 ஆட்டம்) கைப்பற்றியிருந்தார்.

இந்த ஏலம் தொடர்பில் அவர் கூறுகையில்-

உண்மையில் எனக்கே கொஞ்சம் அதிர்ச்சியாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது. இவ்வளவு தொகை கிடைக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. எனது மனைவி அலிசா ஹீலி (அவுஸ்திரேலியா பெண்கள் அணியின் தலைவர்) தற்போது இந்தியாவில் விளையாடி வருகிறார்.

ஏலத்தில் எனது தொகை விவரத்தை நான் பார்ப்பதற்கு முன்பே எனக்கு சொல்லிவிட்டார். இனி கொஞ்சம் நெருக்கடி இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. நான் கடைசியாக விளையாடிய ஐ.பி. எல்லில் பெற்ற அனுபவம், அதை சமாளிக்க உதவும் என்று நம்புகிறேன். முடிந்தளவுக்கு தாக்கத்தை ஏற்படுத்த முயற்சிப்பேன் - என்றார்.

# கோப் 28: நூலிழையில் ஊசலாடும் மனித இனம்!

நாராயணி சுப்ரமணியன்




ஐ.நா. காலநிலை மாற்றக் கூட்டமைப்புச் சட்டகத்தின் (**United Nations Framework Convention on Climate Change**) உறுப்பினர்கள் பங்கேற்ற 28ஆவது காலநிலை உச்சி மாநாடு (கோப் 28) டுபாயில், நவம்பர் 30 முதல் டிசம்பர் 12 வரை நடைபெற்றது. நம்பிக்கையூட்டும் சில நகர்வுகளும், ஏமாற்றம் தரும் பல நிகழ்வுகளுமாக இம்மாநாடு முடிவடைந்திருக்கிறது.

### எதிர்பார்ப்புகள்

காலநிலை மாற்றத்துக்கான முக்கிய உடன்படிக்கையான '2015 பாரிஸ் ஒப்பந்தத்தில் உலகின் பெரும்பான்மையான நாடுகள் கையெழுத்திட்டிருக்கின்றன. இதன்படி ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒரு பெரிய ஆய்வு நடத்தப்படும். இலக்கை நோக்கி எதிர்பார்த்தபடி எல்லா நாடுகளும் செயல்படுகின்றனவா என்பது கணக்கெடுக்கப்படும். பாரிஸ் ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்த பிறகு, முதன்முறையாக இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து நடந்த இந்த ஆய்வின் முடிவுகள், 28 ஆவது உச்சிமாநாட்டில் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. மாநாடு தொடங்குவதற்குச் சில நாட்கள் முன்னதாக வெளியான உமிழ்வு இடைவெளி அறிக்கை (**Emissions Gap Report**), அதிர்ச்சி தரக்கூடியதாக இருந்தது.

உமிழ்வுகள் அப்படியே தொடரும் பட்சத்தில் வெப்பநிலை உயர்வதற்கே வாய்ப்புகள் அதிகம். ஆகவே, அந்த அறிக்கையின் அடிப்படையில் மாநாட்டில் விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டுச் செயல்பாடுகள் முடுக்கிவிடப்படுமா என்ற எதிர்பார்ப்பு பரவலாக இருந்தது. புதைபடிவ எரிபொருள்களின் உற்பத்தியை மேற்கொள்ளும் ஐக்கிய அரபு அமீரகத்தில் மாநாடு நடத்தப்படுவதைப் பலர் விமர்சித்திருந்தனர். மாநாட்டின் தலைவராகச் சுல்தான் அல்-ஜாபர் நியமிக்கப்பட்டது மேலும் சர்ச்சைகளைக் கிளப்பியது. அபுதாபி எண்ணெய் நிறுவனத்தின் தலைவரான அல்-ஜாபர், சமரசமின்றிப் புதைபடிவ எரிபொருள்களை அணுகுவாரா என்று பலரும் கேள்வி எழுப்பினர்.

### முக்கிய முடிவுகள்

மாநாட்டின் முதல் நாளிலேயே மிக முக்கியமான ஒரு முடிவு எடுக்கப்பட்டது. சென்ற உச்சி மாநாட்டில் விவாதமாக முன்னெடுக்கப்பட்ட இழப்பு-பாதிப்புக்கான நிதியம் (**Loss and Damage Fund**) குறித்த தெளிவான வரைமுறைகள் வெளியிடப்பட்டன. வளர்ந்துவரும் நாடுகளைச் சேர்ந்த பெரும்பான்மைப் பிரதிநிதிகளைக் கொண்ட 26 நபர் குழு ஒன்று அமைக்கப்படும் என்றும், நிதியம் சுயேச்சையாக இயங்கும் என்றும் அறிவிக்கப்பட்டது. ஜெர்மனியும் ஐக்கிய அரபு அமீரகமும் தலா நூறு மில்லியன் டாலர்களை வழங்குவ தாக அறிவித்த நிலை யில், இந்த நிதியத்தைத் தொடங்குவதற் கான குறைந்தபட்சத் தகுதி எட்டப்பட்டது.




அடுத்தடுத்து நாடுகள் நிதி வழங்கியதில் மாநாட்டின் இறுதி நாளில் மொத்தம் 770 மில்லியன் டாலர் சேகரிக்கப்பட்டது. காலநிலை உச்சி மாநாடுகளின் 28 ஆண்டுகால வரலாற்றில் முதல் முறையாக, மாநாட்டு ஆவணத்தில் நேரடியாக, 'புதைபடிவ எரிபொருள் பயன்பாட்டைக் குறைப்பது' என்பது போன்ற சொற்றொடர் பயன் படுத்தப்பட்டிருக்கிறது. இறுதி அறிக்கையில், 'காலநிலைமாற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்காக, புதைபடிவ எரிபொருள்களிலிருந்து விலகிச் செல்வது' என்ற முடிவு குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது ஒரு முக்கிய நகர்வு. புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பயன்பாட்டை மூன்று மடங்கு அதிகரிப்பது என்று ஓர் ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. ஆற்றலின் செயல்திறனை அதிகரிப்பதாகவும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. காலநிலை மாநாடு வரலாற்றில், காலநிலை சார்ந்த நோய்கள், உடல்நலம், சுகாதாரப் பிரச்சினைகள்ஆகியவை பற்றி விவாதங்கள் முதல்முறையாக நடந்தன. இது தொடர்பான அறிக்கையில், 124 நாடுகள் கையெழுத்திட்டன.

### ஏமாற்றங்கள்

இழப்பு-பாதிப்புக்கான நிதியத்தில் இப்போது உள்ள நிதி போதுமானது அல்ல என்று தீவு நாடுகளும் மூன்றாம் உலக நாடுகளும் குற்றம்சாட்டியிருக்கின்றன. ஒவ்வோர் ஆண்டும் 400 பில்லியன் டாலர் அளவுக்குக் காலநிலை இழப்புகள் ஏற்பட்டுவரும் நிலையில், ஒரு சர்வதேச மாநாட்டில் நேரடியாகக் கோரிக்கை வைத்தும் சில நூறு மில்லியன் டாலர்கள் மட்டுமே சேர்ந்திருப்பது கவலைக்குரியது. மாநாட்டின் இறுதி அறிக்கையில், கரிமச் சேகரிப்புத் தொழில்நுட்பம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது கரிம வணிகத்தை ஊக்குவிப்பதாக இருக்கிறது. தவிர, கரிமச் சேகரிப்புத் தொழில்நுட்பம் இருக்கிறது என்பதாலேயே உமிழ்வுகளைப் பற்றிக் கவலைப்படாமல் வழக்கம்போல புதைபடிவ எரிபொருள்கள் பயன்படுத்தப்படும் அபாயம் இருக்கிறது. அறிக்கையின் பல இடங்களில் உள்ள சொற்களும் வாக்கியங்களும் குழப்பமானவையாக இருக்கின்றன. குறிப்பாக, 'வரைமுறையற்ற நிலக்கரிப்பயன்பாட்டைக் குறைக்க வேண்டும்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 'தடுக்க வேண்டும்' அல்லது 'முழுமையாகக் கைவிட வேண்டும்' என்று ஏன் சொல்லவில்லை என்று செயல்பாட்டாளர்கள் கேள்வி எழுப்புகிறார்கள்.

புதுப்பிக்கத்தக்க ஆற்றலை நோக்கி நகர வேண்டும் என்று அறிக்கை வலியுறுத்துகிறது. ஆனால், அதற்கான நிதியுதவி பற்றி எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. 'இடைப்பட்ட எரிபொருள்களைப் பயன்படுத்தலாம்' என்று அறிக்கை தெரிவிக்கிறது. இந்தச் சொல்லாடல் ஆபத்தானது என்றும், மேலை நாடுகள் திரவ இயற்கை எரிவாயுவை நோக்கி நகர்வதை இது ஊக்குவிக்கும் என்றும் காலநிலை வல்லுநர்கள் எச்சரிக்கின்றனர். இந்த மாநாட்டில் எண்ணெய் நிறுவனங்கள், கரிமச் சேகரிப்பு- தொழில்நுட்பங்கள் சார்ந்த நிறுவனங்களிலிருந்தும் பலர் பங்கேற்றிருக்கின்றனர். புதைபடிவ எரிபொருள் பயன்பாடு குறித்து ஏற்கெனவே நாடுகள் முரண்பட்டுவரும் நிலையில், இவர்கள் பங்கேற்றது விமர்சிக்கப்பட்டது.

இந்த மாநாட்டில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன், சீன அதிபர் ஷி ஜின்பிங் இருவரும் கலந்துகொள்ளவில்லை. அமெரிக்காவின் முன்னெடுப்பாகப் பெரிதாக எதுவும் நடக்கவில்லை. இழப்பு-பாதிப்பு நிதியத்துக்கு, அமெரிக்கா சார்பில் 17.5 மில்லியன் டாலர்கள் மட்டுமே அளிக்கப்பட்டிருக்கிறது. இன்னொருபுறம், பசுமை காலநிலை நிதியத்துக்கு 2 பில்லியன் டாலர் வழங்குவதாக அமெரிக்கத் துணை அதிபர் கமலாஹாரிஸ் அறிவித்திருக்கிறார். ஆனால், அமெரிக்காவின் உள் அரசியல் இது நடக்காமல் தடுத்துவிடும் என்று வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். ஒபாமாவின் காலகட்டத்திலும் இதுதான் நடந்தது என்று அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

"காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமானால் புதைபடிவ எரிபொருள்களிலிருந்து விடுபட்டே ஆக வேண்டும்" என்று ஐ.நா. பொதுச் செயலாளர் அண்டோனியோ குட்டர்ஸ் வலியுறுத்தியிருக்கிறார். ஆனால், 'புதைபடிவ எரிபொருள்களிலிருந்து விலகிச்செல்வது' என்ற முடிவை எடுக்கவே 30 ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருந்தது. "புதைபடிவ எரிபொருள்களைக் கைவிடுவது பற்றிப் பேச முடியவில்லை. பல ஆண்டுகளாக அதற்கு எதிர்ப்பு இருந்தது" என்று குட்டர்ஸ் வெளிப்படையாகத் தெரிவித்திருக்கிறார். மாநாட்டு அறிக்கையில் பல ஓட்டைகள் இருப்பதாகவும், அதை வைத்து உலக நாடுகள் தப்பித்துக் கொள்ளும் என்றும் விமர்சிக்கப்படுகிறது.

இந்த மாநாட்டில் சில முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பது உண்மையே. ஆனால், அவை முறையாகச் செயல்படுத்தப்பட வேண்டும். அடுத்தடுத்த முடிவுகள் இன்னும் விரைவாக எடுக்கப்பட வேண்டும். அசர்பைஜானில் நடக்க இருக்கும் அடுத்த உச்சி மாநாட்டுக்கு முன்னதாக எல்லா நாடுகளும் உமிழ்வுகளைப் பெருமளவில் குறைக்க வேண்டும். விரைவான செயல்பாட்டின் மூலமாக மட்டுமே ஒரு நூலிழையில் தொங்கிக்கொண்டிருக்கும் மனித இனத்தின் எதிர்காலத்தைப் பாதுகாக்க முடியும். ●


# ‘கோ சல’ மாநிலங்கள்:

## திமுக எம். பி. ஏற்படுத்திய களங்கத்துக்கு கோ சல பிராயச்சித்தம்!

### பாராளுமன்ற பாதுகாப்பு வளையம் பரீட்சிக்கப்பட்டதா? இமயமலை ஏற காரணம் என்ன?







சென்னை மடல்
-பகவான் சிங்-

நான் இப்போதெல்லாம் குடை இல்லாமல் வீட்டுப் படியைத் தாண்டுவதில்லை. நோ, நோ, அடித்த புயலுக்கும் ந்த என் குடைக்கும் முடிச்சு போடாதீர்கள். ந்தப் புதுப் பழக்கம் ஒரு பெரும் பீதியால் உண்டானது. எழுபது வயதைக் கடந்த ஒரு முதியவனுக்கே இயல்பான உண்ட களைப்பில் உறங்கிக் கொண்டிருந்த என்னை ஒரு நண்பரின் தொலைபேசி அழைப்பு எழுப்பி விட்டது. அவர் சிரித்துக்கொண்டே ‘வாட்ஸப்’ செய்தியைப் பார்க்கச் சொன்னார். நானும் பார்த்தேன் அதிலிருந்து வெயிலோ மழையோ, என் குடையைப் பிரிந்து நான் வெளியே அடி எடுத்து வைப்பதில்லை.

நண்பர் அனுப்பிய அந்த வாட்ஸப் செய்தி, ‘அனைத்திந்திய ஹிந்து மஹாசபை’யின் தலைவர் என்று கூறிக்கொள்ளும் சர்ச்சைக்குரிய ஸ்வாமி சக்ரபாணி மஹராஜ் என்பவர் ‘யூரியூபி’ல் பேசும் ஒரு காணொலி. அதில் அவர், தீய சக்திகளால் மாசடைந்த இந்த நாட்டைத் தூய்மைப் படுத்த விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர்கள் மூலமாக பசு மூத்திரம் நாடு முழுவதும் தெளிக்கப்படும் என்று பேசியிருந்தார். நான் முக்கியமான ஒரு நபரைக் காணத் தயாராகிச் செல்லும்போது என்மீது பசு மூத்திரத்தால் சுத்தப்படுத்தப்பட்டால் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். எனவே, நான் குடையை என் கவசமாக்கிக்கொண்டு வெளியில் செல்ல முடிவு செய்தேன்.

இப்படிக்கூட ஒருவர் அபத்தமாகப் பேசமுடியுமா? அண்மையில் நடந்த நான்கு மாநில சட்டப்பேரவைத் தேர்தல்களில், மூன்று வட மாநிலங்களில் பாஜகவும் தென் மாநிலமான தெலங்கானாவில் காங்கிரஸும் வெற்றி பெற்றதைக் குறிப்பிட்டு, திமுக நாடாளுமன்ற உறுப்பினர் செந்தில்குமார் மக்களவையில் அண்மையில் பேசிய பொறுப்பற்ற பேச்சுக்குப் பதிலளிக்கும் வகையில், இந்த ஹிந்து மதக் காவலரின் இந்தப் புனிதச் சொற்பொழிவு நிகழ்ந்தது. மக்களவையில் அந்த உறுப்பினர் பேசியதாவது: “பொதுவாக நாங்கள் பசு மூத்திர மாநிலங்கள் என்று குறிப்பிடும் ஹிந்தி பேசும் மாநிலங்களில் மட்டும்தான் பாஜகவின் தேர்தல் வெற்றி சாத்தியம். தென் மாநிலங்களில் (தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், தெலங்கானா, கர்நாடகா மற்றும் கேரளா) பாஜக நுழைய முடியாது”.

மேலும் அவர், ,ந்த மாநிலங்களில் நிலவும் பிரச்னைகளை வெளிச்சம் போட்டுக் காட்டி, பாஜக, இந்தத் தென் மாநிலங்களனைத்தையும் ஜம்மு காஷ்மீர்போல யூனியன் பிரதேசங்காளாக்கி, தன் ஆளுமைக்குள் கொண்டுவந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றார்.

இவரது இந்தப் பேச்சு, பரவலாக பாஜகவினர் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. அவருக்குப் பதிலளித்த தமிழ்நாடு பாஜக தலைவர் அண்ணாமலை, தமிழகத்தை ஆளும் திமுகவின் அரசியலின் தரம் கீழ்த்தரமாக சென்றுகொண்டிருப்பதாகக் குற்றம் சாட்டினார். “வட மாநில நண்பர்களை பானிபூரி விற்பவர்கள், கழிவறை கட்டுபவர்கள் என்றெல்லாம் கூறிய ஐ.டே.னு.ஐ யு. கூட்டணி எம் பி, இப்போது பசு மூத்திரத்தையும் சேர்த்திருக்கிறார்” என்று அவர் எக்ஸ் (முன்னதாக ட்விட்டர்) தளத்தில் பதிவிட்டிருந்தார்.


D.N.V. செந்தில்குமார்

மாநிலத்தில் நிலவும் வெள்ள நிலையைக் குறிப்பிட்ட அண்ணாமலை, “திமுகவின் மோசமான நிர்வாகத்தால் சென்னை மூழ்குவதுபோல, நாடாளுமன்ற அவையிலும் அவர்களின் பேச்சுக் கீழ்த் தரமாகிறது” என்றார். காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி இதுபோன்ற கேவலமான கருத்துகளை அங்கீகரிக்கிறாரா என்று பாஜகவைச் சேர்ந்த கர்நாடகாவின் முன்னாள் அமைச்சர் சி. டி. ரவி கேள்வி எழுப்பியுள்ளார். “ஹிந்தி பேசும் முக்கிய மாநிலங்களில் வாழும் பாரதீயர்களை அவமானப்படுத்திய இந்த திமுக உறுப்பினரின் கருத்துடன் ராகுல் காந்தி ஒத்துப்போகிறாரா?” என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார். எம்பி செந்தில்குமாரின் ‘பசு மூத்திர மாநிலங்கள்’ என்ற குறிப்பு மிகப் பெரிய சர்ச்சையைக் கிளப்பியுள்ள நிலையில், இந்தச் ‘சிறந்த’ ஹிந்து மஹராஜ் இதைப் பயன்படுத்தி, தனது யூரியூப் உரையில், ஹிந்துக்களின் புனிதத் தாயான பசுவின் மூத்திரத்தைத் தெளித்து, இந்த ஹிந்து தேசத்தைத் தூய்மைப் படுத்தப்போவதாக அறிவிக்கிறார். நான் என் குடையை என் வீட்டின் ஒரு மூலையில் போட்டுவிட்டு, இப்போது ஓர் அறிவுள்ள சாதாரண மனிதனைப்போல நடந்து கொள்கிறேன். காரணம், பல முக்கிய ஹிந்து அமைப்புகளாலேயே கூட இந்த மஹராஜ் போலியானவர் என்று புறந்தள்ளப்பட்டவர். சில மாதங்களுக்கு முன்னர்தான், நாடாளுமன்றத்தில் நிலவை ஒரு ஹிந்து நாடாகப் பிரதமர் அறிவித்துத் தீர்மானம் ,யற்ற வேண்டும் என்று ,வர் கூறியிருந்தார். மேலும் ‘சந்திரயான்-3’ தரையிறங்கிய ‘சிவசக்தி பாயின்ட்’ சந்திர மண்டலத் தலைநகராக அறிவிக்கப்படவேண்டும் என்றும், இதனால் எதிர்காலத்தில் பிற மதத்தவர்கள் நிலவைச் சொந்தம் கொண்டாடுவதைத் தவிர்க்கமுடியும் என்றும் இவர் அறிவுறுத்தியுள்ளார்.

திமுக எம் பி செந்தில்குமாரின் ‘பசு மூத்திரம்’ என்ற கருத்தும், அவரது முதலாளியும் தமிழக முதலமைச்சருமான மு. க. ஸ்டாலினின் மகன் உதயநிதி சில மாதங்களுக்கு முன்னர் உதிர்த்த ‘சனாதன தர்ம’ கருத்தும் வரும் மாதங்களில் நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரத்திற்கு பாஜகவாலும் அண்ணாமலையாலும் தமிழகத்தில் ஹிந்து வாக்கு வங்கியை உருவாக்கப் பயன்படுத்தப்படலாம். தகர்க்க முடியாத திராவிட தளத்தை எதிர்க்க, காவிப் படைக்குக் கிடைத்த துருப்புச் சீட்டுகளாக இவை மாறலாம்.

ஆனால், அண்ணாமலையும் அவரது குழுவும் முதலில் மாநிலத்தில் தங்கள் கட்சியை ஒழுங்குபடுத்தி, இருக்கும் உட்கட்சிப் பூசல்களைக் களைந்து, முக்கியமாக கள அளவில் பாஜகவை வேரூன்றச் செய்து, தேர்தல் வாக்குச் சாவடி கமிட்டிகளை நிர்வகிக்கும் அளவுக்குப் போதுமான எண்ணிக்கையில் ஆட்களைக் கண்டறியவேண்டியது அவசியமானது. சரி, இப்போது விளையாட்டை விட்டு, சில முக்கிய விஷயங்களைப் பற்றிப் பார்ப்போம்.

டிசம்பர் 13, புதன் கிழமை அன்று இந்திய நாடாளுமன்றத்தில் பாதுகாப்புக் குறைபாடு காரணமாக, இரண்டு இளைஞர்கள், பார்வையாளர் மாடத்திலிருந்து உறுப்பினர்களின் மேசைகளின்மீது குதித்துத் தாவி ஓடியும், மஞ்சள் புகையைப் பரப்பியும் ஒரு பீதியைக் கிளப்பினர். பன்னடுக்குப் பாதுகாப்புச் சோதனைகளையும் தாண்டி அவர்கள் அந்த கனிஸ்டர்களைத் தங்கள் காலணிகளில் ஓட்டை அமைத்து, அதில் ஒளித்து வைத்து உள்ளே எடுத்துச் சென்றுள்ளனர். பல தேசிய உளவு அமைப்புகளுடன், தீவிரவாதச் செயல்பாடுகளுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுக்கும்



டில்லி காவல் துறைச் சிறப்புக் குழு, தீவிர விசாரணையை முடுக்கி விட்டுள்ளது. ஒரு பெண் உட்பட, ஆறு பேர் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் வேலையில்லாதவர்கள் என்றும், அதனால் ஏற்பட்ட மன உளைச்சலால், அரசின் கவனத்தை வேலையின்மை நோக்கி ஈர்க்க விரும்பி இதைச் செய்ததாக முதல் கட்ட விசாரணை தெரிவிக்கிறது. மேலும், நான்கு ஆண்டுகளாகத் தீவிரமாகத் திட்டமிட்டு, சமூக ஊடகங்கள் மூலமாக ஒருவருடன் ஒருவர் தொடர்பில் இருந்து, இந்த ஆறு பேரும் இதை அரங்கேற்றியிருப்பதாகவும் கூறப்படுகிறது. ஊடுருவலுக்குச் சில நாட்கள் முன்னதாக நாடாளுமன்றக் கட்டடத்தை உளவு பார்த்துள்ளனர். பாராளுமன்றத் தாக்குதல் (2001 டிசம்பர் 13) நடந்த தேதி நெருங்கிவந்த நிலையில் தீவிர கண்காணிப்பில் இருந்திருக்கவேண்டிய பொலிஸ் மற்றும் உளவுத் துறைகள் இந்த நான்கு வேலையில்லாப் பட்டதாரிகளைக் கவனிக்காமல் விட்டுவிட்டனர்.

வேலைவாய்ப்பின்மை, விவசாயிகள் பிரச்னை, வடகிழக்கு மாநிலமான மணிப்பூரில் நடந்த வன்முறை போன்ற பல விஷயங்களைக் குறித்து அரசின் கவனத்தை ஈர்க்கவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக முதல் கட்ட விசாரணையின்போது, குற்றம்சாட்டப்பட்டவர்கள் தெரிவித்தார்கள். வண்ணப்புகை பரப்பியதற்குக் காரணம், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவை குறித்து விவாதிக்க வேண்டும் என்பதற்காக என்றும், இவை குறித்துப் பிரதமரைச் சந்தித்துப் பேச விரும்பியதாகவும் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், பொலிஸ் இதை நம்பவில்லை. காரணம், கைது செய்யப்படுவதற்கு முன் தலைமறைவாகியிருந்த, குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவரான லலித் ஜா, தனது நண்பர்களின் போன்கள் அனைத்தையும் வைத்திருந்தார். விசாரணையின்போது அவற்றைத் தீயிலிட்டு எரித்து விட்டதாக அவர் தெரிவித்தார். இந்தத் தாக்குதலுக்கு அவர்கள் திட்டமிருந்தது பற்றியும் வேறு சில தேச விரோத கும்பல்களுடன் அவர்களுக்கு இருந்த தொடர்புகள் பற்றியும் அந்த போன்களில் தகவல்கள் இருந்திருக்கலாம் என்பது காவல் துறையின் ஐயம்.

(16ம் பக்கம் பார்க்க)

# களுவாஞ்சிக்குடியில் சாதனை மாணவர் பாராட்டி கௌரவிப்பு



மட்டக்களப்பு, டிசெ. 22

பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) களுவாஞ்சிகுடியில் புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்களையும் சாதாரணதரப் பரீட்சையில் 9 ஏ சித்திபெற்ற மாணவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

பாடசாலை முதல்வர் ரீ.பார்த்தீபன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வுகளுக்கு மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர். ஜீ.சுகுணன் பிரதம அதிதியாகவும், கிழக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் பொறியியலாளர் கே.செந்தூரன்,சட்டத்தரணி ஆர்.றமணா, சட்டத்தரணி கே.கிருபாகரன், மக்கள் வங்கி முகாமையாளர் டீ.தனசாகரன் ஆகியோர் கௌரவ அதிதியாகளாகவும் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர், உறுப்பினர்கள் பெற்றோர்கள், பழையமாணவர்கள் மற்றும் பல பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

(அ)

# ‘கோ சல’ மாநிலங்கள்:...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர், அமைச்சர்கள் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கட்டடத்தையும் பாதுகாக்கும் வளையம் எத்தனை வலுவானதாக இருக்கிறது என்பதை ஆழம் பார்க்க இந்த வேலையில்லா இளைஞர்களை அந்தத் தீய சக்தி பயன்படுத்தியிருக்கலாம். அதிர்ச்சி தரும் இந்தச் சம்பவத்தில் சங்கடமான ஒரு விஷயம் என்னவென்றால், இந்த ஊடுருவல்காரர்களுக்கான பார்வையாளர் மாட அனுமதிச் சீட்டு பாஜக எம்பி பிரதாப் சிம்ஹாவின் பரிந்துரையின் பேரில் வழங்கப்பட்டிருப்பது தான். அவர்களின் நோக்கங்களை அறியாமலே பாவம் அவர் இதை வழங்கியிருப்பார். தனது மைசூரு தொகுதியைச் சேர்ந்த ஒருவர் (இந்த நால்வரில் ஒருவரின் தந்தை) தனது மகன் நாடாளுமன்ற அவை நடவடிக்கைகளைப் பார்க்க விரும்புவதாகவும் அதற்காக அநுமதிச் சீட்டு வழங்குமாறும் கோரியதாகவும் அவர் பின்னர் தெரிவித்தார். ஆனால், எம்பியுடன் பேசியதை அந்தத் தந்தை மறுப்பதாக ஊடகச் செய்திகள் கூறுகின்றன. இந்த ஆறு பேர் கொண்ட குழு சில தேசியப் பிரச்னைகள் குறித்து வெளிச்சம்போட்டுக் காட்டும் நோக்கில், வேறு எந்தத் தீய நோக்கும் இன்றியும் செயல்பட்டிருக்கலாம் என்று சிலர் கருதவும் காரணம் உள்ளது. இவர்களில் இருவர், மக்களவையில் உறுப்பினர்களால் பிடிக்கப்பட்டுக் காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில், ஒரு பெண் உள்ளிட்ட மற்ற ,ருவர், அதே நேரத்தில் நாடாளுமன்றத்துக்கு வெளியே மஞ்சள் புகை பரப்பி கோஷம் போட்டதற்காகக் கைது செய்யப்பட்டனர்.

டில்லியிலிருந்து வரும் ஓர் அச்சுறுத்தும் தகவலின் படி, அந்தப் புகை கன்களில் சீனத் தயாரிப்புக் குறியீடுகள் ,ருந்ததாகவும் தெரிகிறது. ஆனால், அதைத் தற்போது பெரிதாக எடுத்துக்கொள்ளத் தேவையில்லை. காரணம், உலகம் முழுவதும் கறுப்புச் சந்தைகளில் நல்லதும் கெட்டதுமாக ஏராளமான சீனப் பொருட்கள் குவிந்துள்ளன. அதுபோன்ற ஒரு டில்லி கடையிலிருந்து இதை இவர்கள் வாங்கியிருக்கலாம். உண்மையில் இந்த இரண்டு நாடாளுமன்ற ஊடுருவல்காரர்களும் பார்வையாளர் மாடத்திலிருந்து குதித்துத் தங்கள்மீது தீ வைத்துக் கொள்ளத் திட்டமிட்டிருந்ததாகவும் ஆனால், குறைந்த அளவே தீக்காயம் ஏற்படுத்தக்கூடிய, தாங்கள் தேடிய

ரசாயனம் கிடைக்காததால் அந்த எண்ணத்தைக் கைவிட்டதாகவும் கூறப்படுகிறது. முதல் கட்ட விசாரணையில், இவர்கள் நாட்டில் உள்ள சில பிரச்னைகள் குறித்துக் கவனத்தை ஈர்க்கவே இத்தகைய செயலைச் செய்ததாகவும், தங்களையும் வேறு யாரையும் காயப்படுத்தும் நோக்கம் இல்லை என்றும் தெரிய வருகிறது. உளவு அமைப்புகளின் விசாரணை முழு உண்மையையும் வெளிக்கொண்டு வரலாம்.

உயர் தொழில்நுட்ப பாதுகாப்பு அமைப்புடன் பிரம்மாண்டமாகக் கட்டப்பட்டுள்ள புதிய நாடாளுமன்றக் கட்டத்ததில் இருக்கும் குறைபாடுகளை இது வெளிச்சம்போட்டுக் காட்டியுள்ளது என்பது ஓர் அச்சமூட்டும் உண்மை. அடுத்த சில மாதங்களில் நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரத்துக்காகப் பிரதமரும் பாஜக மற்றும் பிற கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும் திறந்த வெளியில் வாக்கு சேகரிக்கப் பயணம் செய்யவிருக்கும் நிலையில், தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று நம்புகிறேன்.

இப்போதைக்கு நான் உங்களிடமிருந்து விடைபெற்று, கொழும்பில் செய்யப்பட்டுள்ள ‘ஹிமாலயப் பிரகடனம்’ குறித்த உங்கள் காரசாரமான விவாதத்துக்கு வழி விடுகிறேன். இது ஒரு மாபெரும் பிரகடனம் அல்லவா? நான் இதை வேறு சூழலில் முன்னரே சொல்லியிருக்கிறேன் இந்தப் ‘பிரகடன’த்தின் பின்னணியில் மீண்டும் கூறுகிறேன்.

நான் வேலுப்பிள்ளை பிரபாகரன் இல்லாததை வெகுவாக உணர்கிறேன், வருந்துகிறேன். பெரும்புலி இருந்திருந்தால், இதுபோன்ற பிரகடனக்காரர்கள் இமயமலை ஏறியிருக்க மாட்டார்கள் துவாரகா வீடியோ நம் கண்ணில் பட்டிருக்காது. தலை இருந்தால் வால் ஆடாதென்பார்கள் அப்பா, எத்தனை வால்கள் இப்போ ஆடுகின்றன!

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

